Find us on facebook/tamilmirror    Follow us on tamilmirror    epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk

THURSDAY, DECEMBER 22, 2022

வியாழக்கிழமை டிசெம்பர் 22, 2022 | ஒளி: 08 கதிர் 170 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | Free

# புதிய வைரஸ் உருவாகக்கூடும்

## பேராசிரியர் நிலிகா எச்சரிக்கை

உலகில் பல நாடுகளில் கொரோனாவின் பல்வேறுபட்ட மாதிரிகள் இப்போதும் காணப்படுகின்றன. ஆகவே புதிய வைரஸ் பரவினால் மாத்திரமே பெருந்தொற்று ஆபத்து மீண்டும் ஏற்படுமென ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக பேராசிரியர் நிலிகா மலவிகே தெரிவித்துள்ளார். தற்போதும் புதிய திரிபுகளுடன் வைரஸ் பரவக்கூடிய ஆபத்துள்ளது. இதன் காரணமாக இலங்கையில் கண்காணிப்பை பலப்படுத்த வேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார்.

உலகில் தற்போது அதிகளவு கொரோனா நோயாளர்கள் சீனாவிலேயே நாளாந்தம் அடையாளம் காணப்படுகின்றனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன. அடுத்த சில மாதங்களில் 800 மில்லியன் மக்கள் பாதிக்கப்படலாம் என நிபுணர்கள் எச்சரிக்கின்றனர். அரை மில்லியன் மக்கள் உயிரிழக்கக்கூடும் என என். பி.ஆர் தெரிவித்துள்ளது. மரபணுவரிசை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகளை இலங்கை வலுப்படுத்த வேண்டும் எனவும் பேராசிரியர் மலவிகே தெரிவித்துள்ளார்.

மூன்று வாரங்களுக்கு முன்னர் நாங்கள் இறுதியாக மரபணு ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுத்தோம்,தற்போது இதற்கான மாதிரிகள் இல்லை என குறிப்பிட்டுள்ள அவர், தற்போது இலங்கையில் இன்புளுவன்சா பிரச்சினை உள்ளது. ஆனால், கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை குறைவு என்றார்.

உலகின் ஏனைய பகுதிகளில் குறைந்தளவு நோயாளர்கள் அடையாளம் காணப்படும் அதேவேளை சீனாவில் அதிகளவு நோயாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர். இதுவே பிரச்சினை, புதிய வைரஸ் உருவாவதற்கான மிகவும் பொருத்தமான சூழ்நிலை இதுவெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.





## அங்கே கிடைக்காது இங்கே கிடைக்கும்

நத்தார் பண்டிகை தினமான டிசெம்பர் 25ஆம் திகதியன்று நாடளாவில் ரீதியில் உள்ள அனைத்து மதுபான சாலைகளும் மூடப்படும் என்று மதுவரித் திணைக்கள ஆணையாளர் நாயகம், புதன்கிழமை (21) தெரிவித்தார்.
எனினும், குறித்த தினத்தில் உணவகங்கள் மற்றும் ஹோட்டல்களுக்கு மதுபானம் விநியோகிப்பதற்கு அனுமதி வழங்கப்படும் என்றும் அவர் அறிவித்தார்.

## பணவீக்கம் சரிந்தது

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் ஆண்டுக்கு ஆண்டு மாற்றத்தால் அளவிடப்படும் ஒட்டுமொத்த பணவீக்கமானது நவம்பர் மாதத்தில் 65 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளதாக தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம், புதன்கிழமை (21) தெரிவித்தது. ஒக்டோபரில் 70.6 சதவீதமாகக் காணப்பட்ட பணவீக்கம் நவம்பர் மாதத்தில் 65 சதவீதமாக



வீழ்ச்சியடைந்துள்ளதாக திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

தொடர்ச்சி P2

## 10 மணிநேரம் பொய் 4 நாட்களே உண்மை

நத்தார் பண்டிகையை முன்னிட்டு டிசெம்பர் 24 மற்றும் 25ஆம் திகதிகளிலும் புத்தாண்டை முன்னிட்டு டிசெம்பர் 31 மற்றும் ஜனவரி 1ஆம் திகதியும் மின்வெட்டு அமுல்படுத்தப்பட மாட்டாது என்று மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.
கொழும்பில் புதன்கிழமை (21) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அமைச்சர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



### சீன தூதரகத்தின் துணைத்தலைவரை சந்தித்தார் ஜனாதிபதி

## கடன் மறுசீரமைப்பு குறித்து பேச்சு

சீன தூதரகத்தின் துணைத் தலைவர் ஹு வெய், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேற்று (21) சந்தித்து கலந்துரையாடியிருந்தார். இதன்போது இருதரப்பு மற்றும் பலதரப்பு ரீதியாக இலங்கையின் கடன் விவகாரம் தொடர்பான சமீபத்திய பயனுள்ள விவாதங்களை மதிப்பாய்வு செய்துள்ளனர். இந்நிலையில் இலங்கைக்கு சீனா வழங்கிவரும் தொடர்ச்சியான ஒத்துழைப்புகளை சீன அரசாங்கம் மற்றும் சீன வங்கிகளின் தொடர்ச்சியான



ஆதரவையும் ஜனாதிபதி வரவேற்றுள்ளார்.

## பட்டினியை போக்கிவிட்டு 'புள்ளடி'க்குச் செல்வோம்

பா.நிரோஸ்

43 கோடி ரூபாய் பெறுமதியான மருந்துகள், மருத்துவ உபகரணங்களை இன்று (22) சுகாதார அமைச்சரிடம் கையளிக்க உள்ளதாக தெரிவிக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ், நாட்டு மக்களின் பட்டினியை தீர்த்துவிட்டு தேர்தலுக்குச் செல்ல வேண்டும் என்றார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் புதன்கிழமை (21) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில்

தொடர்ச்சி P2



### கூட்டமைப்புடன் கூட்டணி

## இரட்டை குழல் துப்பாக்கியாய் இணைந்து செயற்படும்



அரசியலமைப்பு பேரவையில் நியமிக்கப்பட உள்ள ஏழு எம்.பிக்களுக்கான நியமனங்களில், ஐந்து சிங்கள எம்.பிக்களும், ஒரு முஸ்லிம் எம்.பியும் இப்போது பெயரிடப்பட்டுள்ளார்கள். இறுதி ஏழாவது எம்பியாக ஒரு தமிழ் எம்இபி இருக்க வேண்டும் என்பது மிக, மிக நியாயமான ஒரு எதிர்பார்ப்பாகும் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்.

தொடர்ச்சி P2

## மனநோய்க்கான வில்லைகளின் பாவனைகள் அதிகரிப்பு

மதுபானம் மற்றும் சிகரெட் பாவனைகள் நாட்டில் தற்போது குறைவடைந்துள்ள போதிலும் 2020 ஆம் ஆண்டில் அறிமுகமான ஐஸ் போன்ற போதைப்பொருள் பரவல் அதிகரிப்பையே வெளிப்படுத்துவதாகவும், மனநோய் மற்றும் மன அழுத்தம் போன்ற நோய்களுக்கு பயன்படுத்தப்படும் வில்லைகளின் பாவனையும் அதிகரித்துள்ளதாக,

தொடர்ச்சி P2

## கல்வி, காவல் துறைகள் கண்டபடி கை நீட்டுகின்றன

2022ஆம் ஆண்டில், கல்வித் துறை அதிகாரிகளுக்கு எதிராக அதிகளவான இலஞ்சக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளதாகவும் அதற்கு அடுத்த இடத்தில் காவல் துறை இருப்பதாகவும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றி சாத்துதல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவின் தகவல்கள் மூலம் அறியமுடிகிறது.
பொருளாதார நெருக்கடி காரணமாக இலஞ்சம் பெறுவது அதிகரித்துள்ளதாக ஆணைக்குழுவின் அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தொடர்ச்சி P2

## ஜெனிவாவில் பதில் சொல்லவே வேண்டும்

பா.நிரோஸ்

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பிரச்சினைகளால் தமிழ், முஸ்லிம் மக்கள் முகங்கொடுத்துவரும் பிரச்சினைகளுக்கு இன்னும் ஒரு சில மாதங்களில் ஜெனிவாவில் இலங்கை அரசாங்கம் பதில் சொல்ல வேண்டிய நிலை ஏற்படும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நிரோஷன் பெரேரா தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

### மாவட்ட மற்றும் மாகாண ரீதியில்

## இறைச்சி, விலங்குகளை கொண்டு செல்ல அனுமதி

இறைச்சி மற்றும் விலங்குகளை மாவட்ட மற்றும் மாகாண ரீதியில் எடுத்துச் செல்வதற்கு உடன் அமுலுக்கு வரும் வகையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம், புதன்கிழமை (21) அறிவித்தார்.

தொடர்ச்சி P2

## ADB யால் ரூ.8 பில்லியன் உதவி

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் வேண்டுகோளுக்கிணங்க இம்முறை பெரும்போக நெற் பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் (Asian Development Bank) நிதியுதவியின் கீழ் ஆகக்கூடியது 20,000 ரூபாய் வரை பண உதவியை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இக்கொடுப்பனவு மீள அறவிடப்பட மாட்டாது என்பதுடன் முற்றிலும் நன்கொடையாகும்

தொடர்ச்சி P2

## ஜனவரி முதல் மின் 'சொக்'



2023 ஜனவரி மாதம் மின்சாரக் கட்டணங்கள் நிச்சயமாக திருத்தப்படும் என்று மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர உறுதிப்படுத்தினார்.
கொழும்பில் புதன்கிழமை (21) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.
மின்சார கட்டணத்தை திருத்துவதற்கான தேவையான விவரங்கள் மற்றும் அறிக்கை என்பன ஜனவரி 2 ஆம் திகதி அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.
மின்சாரக் கட்டணத்தை திருத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சட்டமா அதிபர் ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.
அதற்கிணங்க அமைச்சரவை மற்றும் அமைச்சராகச் செயற்பட்டு அந்தப் பரிந்துரைகளுக்கு அமைவாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் அவற்றை முன்வைக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.
ஓகஸ்ட் மாதம் மின்சாரக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டதாகவும் மின் உற்பத்தி அதிகரிப்பு காரணமாக அந்தத் திருத்தம் போதுமானதாக இல்லை என்று இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## பழைய முறைமையா புதியதோர் பயணமா?

### மக்களே சிந்திக்க வேண்டும் என்கிறார் ஜனாதிபதி

சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில் துறையினர் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதில் சிறந்து விளங்கக்கூடிய சூழலை உருவாக்குவேன் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். நாட்டுக்கு அந்நியச் செலாவணியை ஈட்டித் தருவதில் பிரதான பங்குதாரர்களான தொழில்துறையினரை வலுவூட்டுவதற்கு அரசாங்கம் தயார் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.



கொழும்பு கலதாரி ஹோட்டலில் செவ்வாய்க்கிழமை (20) பிற்பகல் நடைபெற்ற 'சாதனையாளர் விருது 2022' இல் உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## பட்டினியை போக்கிவிட்டு...

கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேர்தலை நடத்துவதைப் பற்றி பேசுவதைவிட நாட்டு மக்களுக்கு எவ்வாறு உணவளிப்பது என்பது தொடர்பிலேயே பேச வேண்டும். தேர்தலுக்கு அதிக செலவுகள் ஏற்படும். இதனால், அந்த பணத்தில் உரம் உள்ளிட்ட பொருள்களை கொள்வனவு செய்யலாம் என்றார்.

நாட்டின் தற்போதையப் பிரச்சினைகளை முதலில் தீர்த்துவிட்டு பிறகு தேர்தலுக்கு செல்வோம். வடிவேல் சுரேஷுக்கு தேர்தல் என்பது ஒரு பிரச்சினை இல்லை. நான் போட்டியிட்ட அனைத்துத் தேர்தல்களிலும் வெற்றிபெற்றுள்ளேன் என்றார்.

நாட்டுக்குள் போதைப்பொருள் வருவதைத் தடுக்க தவறிவிட்டு பாடசாலை மாணவர்களுக்கு உளவியல் ரீதியான பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் சோதனையிடுவதாகவும் தெரிவித்த அவர், நாட்டில் மருந்து பொருள்களுக்கான தட்டுப்பாடுகள் ஏற்பட்டுள்ளன. இதனால் பல உயிர்கள் பிரிந்துள்ளன. பல நோயாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றார்.

வோர்ல்ட் அன்ரிச் பீபல்ஸ் மிஸ் என்கிற நிறுவனத்திடம் கலந்துரையாடி 43 கோடி ரூபாய்க்கான மருந்து பொருள்கள் உள்ளிட்ட மருத்துவ உபகரணங்கள் நாட்டுக்கு நாளை (இன்று) வந்தடைய உள்ளது. இதுவே இந்நாட்டு பிரஜைகளின் கடமையாகும் என்றார்.

மலையகத்தில் உள்ள வைத்தியசாலைகளுக்கும் இந்த மருத்துவ பொருள்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். இச்செயற்பாடு வெற்றியடையுமாக இருந்தால் அடுத்த வருடம் 10 ஆயிரம் ரூபாய் பெறுமதியான பொருள்களை கொண்டுவர முடியும் என்றார்.

## கல்வி, காவல்...

கல்வி அமைச்சு, வலயக் கல்வி அலுவலகங்கள் மற்றும் பாடசாலை அதிகாரிகள் 212 பேருக்கு எதிராக இலஞ்ச குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. கல்வித்துறைக்கு அடுத்த இடத்தில் அதிகளவான இலஞ்ச குற்றச்சாட்டுகள் காவல்துறை அதிகாரிகள் மீது சுமத்தப்பட்டுள்ளதுடன், 161 காவல்துறை அதிகாரிகளுக்கு எதிராக முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இலஞ்சம் தொடர்பான முறைப்பாடுகளில் மூன்றாவது இடத்தில் பிரதேச செயலக அதிகாரிகள் இருப்பதுடன், குறித்த முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணை செய்யப்பட்டு காணி உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள் உட்பட எட்டு அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்வருடம் ஒக்டோபர் 31ஆம் திகதி வரையில் 1,945 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்த இலஞ்ச ஆணைக்குழு, 26 அரச அதிகாரிகளைக் கைது செய்துள்ளதாக தெரிவித்துள்ளது.

## மனநோய்க்கான...

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் பணிப்பாளர் சாக்ய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது மதுபானம் மற்றும் சிகரெட் பாவனை குறைவடைந்துள்ளது. ஹெரோயின் பாவனையும் ஓரளவு குறைவடைந்திருந்தாலும் கூட 2020 ஆம் ஆண்டில் அறிமுகமான ஐஸ் போன்ற போதைப்பொருள் பரவல் அதிகரிப்பையே வெளிப்படுத்துகின்றது.

அதுமட்டுமல்ல, மனநோய் போன்ற நோய்களுக்கு பயன்படுத்தப்படும் வில்லைகளின் பாவனையும் அதிகரித்துள்ளது. மக்கள் இவற்றை பாவிக்கும் சதவீதமும் அதிகரித்துள்ளது. எனினும் பாடசாலைகளில் ஐஸ் போன்ற போதைப்பொருள் பாவிக்கும் அளவை விடவும் ஏனைய போதைப்பொருள் பாவனையில் அதிகரிப்பையே காட்டுகின்றது. அதற்காக இலங்கையில் ஐஸ் போதைப்பொருள் பாவனை குறைவு என நான் கூறவில்லை. பாடசாலைகளை விடவும் பாடசாலைக்கு வெளியில் ஐஸ் பாவனை அதிகமாக காணப்படுகின்றது என்றார்.

பாடசாலைகளுக்கு அருகில் உள்ள பெட்டிக்கடைகளை இலக்குவைத்தே போதைப்பொருள் பரவல் இடம்பெற்று வருகின்றது. அதுமட்டுமல்ல பல்வேறு வழிமுறைகளை இவர்கள் கையாள்கின்றனர். ஆனால் பாடசாலை மாணவர்களின் பைகளை பரிசோதனை செய்து இவற்றை நிறுத்த முடியாது. ஆசிரியர்கள், அதிபர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

எனவே சகலரும் கவனமாக இருக்க வேண்டும். மாணவர்கள் இவ்வாறான போதைப்பொருள் பாவனைக்கு பழகினால் பல்வேறு மோசமான நோய்களுக்கு முகங்கொடுக்க நேரிடும் எனவும் அவர் தெரிவித்தார்.

## ஜெனிவாவில் பதில்...

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் புதன்கிழமை (21) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து உரையாற்றிய அவர், பொருளாதார நெருக்கடிக்கு இதுவரையில் அரசாங்கம் தீர்வை வழங்கவில்லை என்றார்.

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உதவிகளைப் பெற்று அதன் பின்னர் ஜப்பானோடு இணைந்து நிவாரண மாநாடொன்றை நடத்தி பொருளாதார நெருக்கடியை தீர்க்க அரசாங்கம் எண்ணியிருந்தது. இச்செயற்பாடுகள் வேகமாக நடைபெறுவதாக அரசாங்கம் கூறினாலும். அது நடக்கவில்லை எனவும் தெரிவித்தார்.

இதனால் அதிக வரியை சுமக்கவும், அத்தியாவசிய பொருள்களின் விலைகளை அதிகரித்தும் நாட்டு மக்கள் இதற்கான நட்டஈட்டை செலுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது. பொதுஜன பெரமுனவின் அன்று ஐ.எம்.எப்க்கு செல்ல வேண்டாம் என கூறினார்கள். ஐ.எம்.எப் சொல்வதைக் கேட்டால் நாட்டின் பொருளாதாரம் மேலும் மோசமான நிலைக்கு செல்லும் என்றே அவர்கள் கூறினார்கள்.

எனினும் நாடு அழிவை சந்தித்த பின்னர் இப்போது சர்வதேச நாணய நிதியத்துக்கு செல்ல வேண்டுமென கூறுகிறார்கள். ஜெனிவாவில் இலங்கை பாரிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. 2009ஆம் ஆண்டு யுத்தத்துக்குப் பின்னர் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் தமிழ், முஸ்லிம் மக்கள் முகங்கொடுத்துள்ள பிரச்சினைகளுக்காக இன்னும் சில மாதங்களில் ஜெனிவாவுக்கு இலங்கை பதில் சொல்ல வேண்டிய நிலை ஏற்படும் என்றார்.

# பணவீக்கம் சரிந்தது

மேலும், நவம்பர் மாதத்தில் உணவுப் பணவீக்கம் 33.9 சதவீதமாகவும் உணவு அல்லாத பிரிவில் ஆண்டுக்கு ஆண்டு அளவிடப்படும் பணவீக்கம் 31.0 சதவீதமாகவும் குறைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மாதாந்த அடிப்படையிலான உணவுப் பணவீக்கம் ஒக்டோபரில் 80.9 சதவீதமாகக் காணப்பட்ட நிலையில், நவம்பரில் 69.8 சதவீதமாக குறைவடைந்துள்ளது. ஒக்டோபர் மாதத்தில் 61.3சதவீதமாக இருந்த மாதாந்த அடிப்படையிலான உணவு அல்லாத பணவீக்கம் நவம்பரில் 60.4 சதவீதமாக குறைவடைந்துள்ளது. 2021 ஆம் ஆண்டில் குறைந்து காணப்பட்ட தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் ஆண்டுக்கு ஆண்டு மாற்றத்தால் அளவிடப்படும் உணவு மற்றும் உணவு அல்லாத பணவீக்கம், இந்த வருடத்தில் அதிகரித்துள்ளது. இதேவேளை, கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் ஆண்டுக்கு ஆண்டு மாற்றத்தினால் அளவிடப்பட்ட முதன்மைப் பணவீக்கம், நவம்பரில் 61 சதவீதமாக குறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 10 மணிநேரம் பொய் 4 நாட்களே உண்மை

மேற்குறிப்பிட்ட நான்கு தினங்களிலும் தடையற்ற மின்சார விநியோகத்தை இலங்கை மின்சார சபை உறுதி செய்யும் என்றும் அவர் குறிப்பிட்டார்.
இதேவேளை, ஜனவரி மாதம் முதல் தினமும் 10 மணி நேர மின்வெட்டு அமுல்படுத்தப்படும் என்ற கருத்து உண்மைக்கு புறம்பானது என்று தெரிவித்த அமைச்சர், தற்போதைய 2 மணி 20 நிமிட மின்வெட்டை நீடிப்பதில் நம்பிக்கை இல்லை என்றும் தெரிவித்தார்.
ஜனவரி மாதம் முதல் 10 மணித்தியால மின்வெட்டு அமுல்படுத்தப்படும் என்று இலங்கை மின்சார சபையில் அங்கம் வகிக்கும் சில தொழிற்சங்கங்கள் முன்வைத்துள்ள கூற்றுக்கள் அடிப்படையற்றவை என்றார்.
அவர்களுக்கு எதிராக சட்ட மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.
நுரைச்சோலை லக்விஜய அனல்மின் நிலையத்தின் மூன்று மின் உற்பத்தி அலகுகளின் திருத்தப் பணிகளுக்காக அவற்றை அடுத்த வருடம் மூன்று தடவைகள் செயலிழக்கச் செய்வதற்கு அனுமதி கோரப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.
நிலக்கரி பிரச்சினை காரணமாக திருத்தப் பணிக்காக ஒரு மின் உற்பத்தி அலகை மாத்திரம் செயலிழக்கச் செய்ய எதிர்பார்ப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.
மின் உற்பத்தி அலகை செயலிழக்கச் செய்வதால் தேசிய மின் கட்டமைப்புக்கு ஏற்படும் 270 மெகாவோட் மின்சார இழப்பை, டீசல், மண்ணெண்ணெய் மற்றும் நாப்தாவை பயன்படுத்தி ஈடுசெய்ய முடியும் என்றார்.
டிசெம்பர் மாதம் 31ஆம் திகதியுடன் நாட்டின் நிலக்கரி கையிருப்பு தீர்ந்துவிடும் என்பதால் நாட்டில் 10 மணி நேர மின்வெட்டு அமுல்படுத்தப்படும் என்று இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர்கள் சங்கத் தலைவர் நிஹால் வீரரத்ன, திங்கட்கிழமை (20) தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இரட்டை குழல் துப்பாக்கியாய் இணைந்து செயற்படும்

பி தெரிவித்தார்.

ஆனால், இதையும்கூட தட்டி பறிக்க உதயகம்மன்பில, விமல் வீரவன்ச ஆகியோரின் "உத்தர சபை" கட்சி முயல்கிறது. அந்த நியமனம் உதய கம்மன்பில எம்.பிக்கு வழங்க வேண்டும் என அந்த கட்சி பிடிவாதம் பிடிக்கிறது. இது உச்சக்கட்ட பெரும்பான்மைவாதம். திருத்த முடியாத திமிர்வாதம். இதை எதிர்த்து முறியடிப்பதில், தமிழ் தேசிய கூட்டமைப்புடன், தமிழ் முற்போக்கு கூட்டணி, இரட்டை குழல் துப்பாக்கியாக இணைந்து செயற்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பு பேரவை நியமனங்களில் ஏற்பட்டுள்ள இழுபறி நிலைமை தொடர்பில் மனோ எம்.பி மேலும் கூறியதாவது,

அரசியலமைப்பு பேரவையில் சட்டப்படி பத்து உறுப்பினர்கள் இடம் பெறுவார்கள். அதில் ஏழு எம்பிக்களும், மூன்று சிவில் சமூக செயற்பாட்டாளர்களும் இடம் பெற வேண்டும். இந்த எம்.பிகளில், நான்கு சிங்கள எம்.பிகளும், தலா ஒரு எம்.பியாக மூன்று எம்.பிக்கள், வடக்கு, கிழக்கு தமிழர், முஸ்லிம்கள், இலங்கை இந்திய தமிழர் ஆகியோரை பிரதிநிதித்துவம் செய்ய வேண்டும். இதுவே நியாயமான நடவடிக்கை. ஆனால், இது நடைபெறவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

சபாநாயகர், பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகிய மூவரும் தம் பதவிநிலை காரணமாக அரசியலமைப்பு பேரவையில் இடம் பெறுகின்றார்கள். ஜனாதிபதியும், எதிர்க்கட்சித் தலைவரும் தம் பிரதிநிதிகளை நியமிக்க வேண்டும். இதன்படி ரணில் விக்கிரமசிங்க, தமது பிரதிநிதியாக எம்பி. நிமல் சிறிபால சில்வாவையும், சஜித் பிரேமதாச தமது பிரதிநிதியாக எம்.பி கபீர் ஹசீமையும் நியமித்துள்ளனர்.

அரசாங்கம், பிரதான எதிர்க்கட்சி ஆகிய கட்சிகளை சாராத சிறுகட்சிகளின் பிரதிநிதியாக ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் என்பது சட்டம். அதன்படி, சித்தார்தன் எம்.பியின் பெயரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரேரித்துள்ளது. இப்போது இதுவே பிரச்சினையாக மாறியுள்ளது.

மொட்டு கூட்டணியில் தெரிவாகி விட்டு, அரசாங்கங்கத்தின் எல்லா தவறுகளுக்கும் காரணமாகி விட்டு, இப்போது எதிர்க்கட்சி பக்கத்தில் வந்து உட்கார்ந்துள்ள உதயகம்மன்பில, விமல் வீரவன்ச கும்பல், இதையும் தட்டி பறிக்க பார்க்கிறது.

உண்மையில், இந்த விவகாரத்தில் மலையக இந்திய வம்சாவளி தமிழரே முதலில், அநீதிக்கு உள்ளாக்கப்பட்டார்கள். ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரிடம், அவர்கள் நியமிக்கும் எம்.பியாக இந்திய வம்சாவளி தமிழரை பிரதிநித்துவம் செய்யும் ஒரு எம்பியை நியமிக்கும்படி, நானும், பழனி திகாம்பரம் எம்.பியும் கோரிக்கை விடுத்தோம்.

தான் ஏற்கெனவே, நிமல் சிறிபால சில்வாவை பெயரிட்டு விட்டதாகவும், முதலிலேயே கூறி இருந்தால், பரிசீலிக்க இடமிருந்தது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எம்மிடம் கூறினார். தமிழ் முற்போக்கு கூட்டணி எம்.பி ஒருவரை தமது பிரதிநிதியாக நியமிக்க முதலில் எம்மிடம் உடன்பட்ட, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, பிறகு தமது கட்சியில் இருந்து, எம்.பி., கபீர் ஹாசிமை நியமிக்க வேண்டிய கட்டாயம் தனக்கு உள்ளதாக கூறினார். கபீர் ஹாசிம் சகோதர முஸ்லிம் எம்.பி என்பதால் அதை நாம் புரிந்துக்கொண்டோம்.

இந்நிலையில், மூன்று சிவில் சமூக செயற்பாட்டாளர்களில் ஒருவர், கட்டாயம் மலையக இந்திய வம்சாவளி தமிழராக இருக்க வேண்டும் என்ற கோரிக்கையும், அதற்கான பெயரையும் நாம், தமிழ் முற்போக்கு கூட்டணி சார்பாக, பிரதமர், எதிர்கட்சி தலைவர்ஆகியோரிடம் சிபாரிசு செய்து வழங்கியுள்ளோம்.

இத்தகைய பின்னணியில், இறுதியான ஒரேயொரு எம்.பி நியமனத்தில், எம்.பி சித்தார்தனின் பெயரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சிபாரிசு செய்துள்ளது. அது சட்டப்படியும், அரசியல் நியாயப்படியும் சரியானது. ஆகவே அதை நாமும் ஆதரிக்கிறோம். இதையே இன்று பிரச்சினைக்கு உள்ளாக்கி, அதையும் தட்டிப்பறித்து, ஈழத்தமிழ், மலையக தமிழ் என்ற பேதமில்லாமல் ஒரு தமிழ் எம்.பி.கூட அரசியலமைப்பு பேரவையில் இடம்பெற முடியாத நிலைமையை இனவாதிகள் ஏற்படுத்த முயல்கிறார்கள் என்றும் மனோ கணேசன் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இறைச்சி, விலங்குகளை கொண்டு செல்ல அனுமதி

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் டிசெம்பர் 8, 9ஆம் திகதிகளில் கால்நடைகள் திடீரென உயிரிழந்ததையடுத்து, மாட்டிறைச்சி மற்றும் ஆட்டிறைச்சியை மாவட்ட மற்றும் மாகாண ரீதியில் எடுத்துச் செல்வதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த 10ஆம் திகதி தடைவிதித்திருந்தார்.
ஆய்வுகூட பரிசோதனைகள் மூலம் எந்த நோய்த் தொற்றினாலும் கால்நடைகள் உயிரிழக்கவில்லை என்றும் குளிர் காரணமாகவே உயிரிழந்தாக உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து இறைச்சி மற்றும் விலங்குகளின் போக்குவரத்துக்கு நாடு முழுவதும் அனுமதிக்கப்பட்டுள்ளது.
வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் டிசெம்பர் 8,9ஆம் திகதிகளில் 802 மாடுகளும் 34 எருமை மாடுகளும் 256 ஆடுகளும் அடங்லாக 1,092 கால்நடைகள் உயிரிழந்தன.
மேலும், டிசெம்பர் 12ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் 1,660 கால்நடைகள் உயிரிழந்ததுடன், அவற்றின் உரிமையாளர்களுக்கு நட்டஈடு வழங்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்திருந்தமை குறிப்பிட்டத்தக்கது.

# பழைய முறைமையா புதியதோர் பயணமா?

ஒரு நாடு என்ற வகையில் எம்மால் இந்நிலையிலிருந்து மீள முடியும் என்பதை நான் கூற விரும்புகின்றேன். இந்நேரத்தில், தொழில்துறையினருக்கு வரிச்சலுகைகளை வழங்க முடியாது. ஆனால் நமது நாட்டின் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்களை மேலும் மேம்படுத்த முடியும். அதற்கு நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தலாம். உலகின் பிற நாடுகளில் உள்ள சிறிய, நடுத்தர கைத்தொழில்களின் வளர்ச்சியை அவதானித்து அவர்கள் பயன்படுத்திய நவீன தொழில்நுட்பத்தை நாமும் நமது சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில்களின் வளர்ச்சிக்காகப் பயன்படுத்தலாம். அரசாங்கம் என்ற வகையில் அதற்கு அவசியமான அனைத்து ஒத்துழைப்பையும் வழங்க நாம் தயாராக உள்ளோம் என்றார்.

நீங்கள் பழைய முறைகளைப் பின்பற்றுகின்றீர்களா? அல்லது புதிய வழியில் சிந்தித்து, புதிய திட்டத்தின் மூலம் நாட்டின் பொருளாதாரத்தைப் பலப்படுத்தி, சர்வதேச ரீதியாக நாட்டை முன்னேற்றும் வழியில் செயற்படுகின்றீர்களா? என்பதை நீங்களே தீர்மானிக்க வேண்டும். இதற்கான சிறந்த சந்தர்ப்பம் உங்களுக்கு கிடைத்துள்ளது. அதேபோன்று, வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தைப் பார்த்து வருந்துவதா? அல்லது வளமான எதிர்காலத்தை உருவாக்க அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவதா? என்று சிந்திக்க வேண்டும். இரண்டாம் உலகப் போரினால் அழிந்த ஜப்பானும் ஜெர்மனியும் மீண்டும் பொருளாதார ரீதியாக வலிமை பெற்று உலகை எப்படிக் கைப்பற்றின என்று சிந்தித்துப் பாருங்கள். அப்படியானால் இந்த நாட்டின் பொருளாதாரத்தையும் மீளக் கட்டியெழுப்ப முடியும் என்றார்.

அதற்கு எமது மனப்பான்மையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். இன்று நம் நாட்டுக்கு அந்நியச் செலாவணி தேவைப்படுகிறது. அந்நியச் செலாவணியை அதிகரிப்பதன் மூலம் நமது பொருளாதாரம் வலுப்பெறும். அப்போதுதான் கல்வி, சுகாதாரத் துறைகளுக்கு அதிக நிதி ஒதுக்க முடியும். இதன் மூலம் கல்வி மற்றும் சுகாதாரத் துறையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்க முடியும் என்றார்.

# ADB யால் ரூ. 8...

என அமைச்சர் மஹிந்த அமரவீர புதன்கிழமை (21) தெரிவித்தார்.

விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர வெகு விரைவில் விசேட ஊடக சந்திப்பொன்றை நடத்தி இவ்விடயம் தொடர்பில் தெளிவுபடுத்தவுள்ளார்.

ஒரு ஹெக்டேயர் அல்லது அதனிலும் குறைவான நிலப்பரப்பில் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள சிறிய அளவிலான நெல் விவசாயிகளுக்கு 10,000 ரூபாயும் ஒரு ஹெக்டேயரிலும் அதிக நிலப்பரப்பில் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள நெல் விவசாயிகளுக்கு 20,000 ரூபாயும் வழங்கப்படவிருப்பதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார். நெற் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு மாத்திரமே இந்த பண உதவி வழங்கப்படவுள்ளதுடன் இவை நேரடியாக விவசாயிகளின் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்யப்படவுள்ளது.

இம்முறை 08 இலட்சம் ஹெக்டேயர் வயல் பரப்பில் பெரும்போகப் பயிர்ச்செய்கை முன்னெடுக்கப்படவுள்ளது. அதற்கு அவசியமான MOP உரத்தை கொள்வனவு செய்வதற்காகவே விவசாயிகளுக்க இப்பண உதவி வழங்கப்படுகிறது. இதற்காக 08 பில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளதுடன், நெற் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் 12 இலட்சம் குடும்பங்களுக்கு இந்த நிதி பகிர்ந்தளிக்கப்டுமென்றும் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

# ஜனவரி முதல் மின் 'சொக்'

மின்சார விநியோகத்தை பேணுவதற்காக அடுத்த வருடத்துக்கு தேவையான 270 முதல் 300 பில்லியன் ரூபாயை பூர்த்தி செய்யும் வகையில் மின் கட்டணங்கள் திருத்தப்படவுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

### அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தையை

# ஜனாதிபதி இதய சுத்தியுடன் முன்னெடுக்க வேண்டும்

■ எஸ்.கணேசன்

தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை காண்பது தொடர்பான பேச்சுகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதய சுத்தியுடன் முன்னெடுக்க வேண்டும் என தெரிவித்துள்ள மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வே. இராதாகிருஷ்ணன், இதனை தேர்தல் பிரச்சாரத்துக்காக அவர் பயன்படுத்தக்கூடாது என்றார்.

நுவரெலியாவில் நேற்று (21) நடைபெற்ற ஊடகவியலளார் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

போதைப்பொருள் பாவனையை தடுப்பதற்கான நடவடிக்கையின் ஓர் அங்கமாக பாடசாலைகளில் இன்று சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது. பாடசாலை சிறார்கள் சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர். இதனால்



மாணவர்கள் உள ரீதியில் பாதிக்கக்கூடும். எனவே, பொலிஸார் அடிக்கடி பாடசாலைகளுக்குள் நுழைவதை ஏற்கமுடியாது. பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் ஒத்துழைப்புடன் இதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட வேண்டும். மாணவர்களுக்கு இடையூறு விளைவிக்கப்படக்கூடாது.

வடக்கு,கிழக்கில் நிலவும் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். அரசியல் தீர்வு எட்டப்பட வேண்டும். இது தொடர்பான பேச்சுகளை தேர்தலை இலக்கு வைத்து முன்னெடுக்காமல், இதய சுத்தியுடன் முன்னெடுக்க வேண்டும். எல்லா சமூகத்தினரையும் அரவணைத்துக்கொண்டு இப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். தற்போதைய அரசுக்கு மக்கள் ஆணை இல்லை. எனவே, மக்கள் ஆணையுடன் தெரிவாகும் அரசின்கீழ் இப்பிரச்சினையை தீர்த்தால் ஏற்புடையதாக இருக்கும். எந்தவொரு தேர்தலையும் எதிர்கொள்வதற்கு தமிழ் முற்போக்கு கூட்டணி தயார். ஆனால் ஜனாதிபதி தேர்தலை நடத்துவாறா என்பது ஐயமாகவே உள்ளது என்றார்.

## வீரரைப்போல் ரணில் நாடகமாடுகிறார்

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடன் உதவி கிடைத்ததும், நாடு பெற்றுக்கொண்ட கடன்களை செலுத்த ஆரம்பிக்க வேண்டும் என்பதால், சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உதவியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வேண்டுமென்றே காலந்தாழ்த்தி வருவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி குற்றஞ்சுமத்தியுள்ளார்.



சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடனைப் பெறுவதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வேண்டுமென்றே காலந்தாழ்த்தி வருகிறார். சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உதவி கிடைத்துவிட்டால், பெற்றுக்கொண்டுள்ள கடன்களுக்கான வட்டி, கடன்களை மீள செலுத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

இன்று கடன்களையும், வட்டியையும் செலுத்தாமல் இருப்பதால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வீரரைப்போல் நாடகமாடுகிறார். எனவே ஐ.எம்.எப்பின் உதவிகளை பெறும் நோக்கம் ரணிலுக்கு இல்லை எனவும் தெரிவித்தார்.

நாடு செலுத்த வேண்டிய கடன்களுக்கான வட்டியை செலுத்துவதற்கு தேவையான டொலர்களை பெற்றுக்கொள்வதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தோல்வியடைந்துள்ளார். அந்நிய செலாவணியில் ஒரு டொலர் கூட அதிகரிக்கவில்லை எனவும் குற்றஞ்சுமத்தினார்.

### ஜனாதிபதி மாளிகை, மிரிஹான இல்லத்தின் செலவுகளை வழங்க

## ஜனாதிபதி செயலகம் மறுப்பு

### தகவலறியும் ஆணைக்குழுவில் மேன்முறையீடு

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் ஜனாதிபதி மாளிகையின் செலவுகள், கோட்டாவின் மிரிஹான இல்லத்தின் செலவுகள் தொடர்பான தகவல்களை வெளியிடுவதற்கு ஜனாதிபதி செயலகம் மறுத்துள்ளது.

தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தமிழ்மிரர் ஊடகவியலாளர் பா.நிரோஸ் விண்ணப்பித்த விண்ணப்பத்துக்கான தகவல்களை வழங்கினால் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுமென தெரிவித்து அந்தத் தகவல்களை வழங்க ஜனாதிபதி செயலகத்தின் தகவல் அதிகாரியான ஜனாதிபியின் செயலகத்தின் உதவிச் செயலாளர் எஸ்.கே. ஹேனதீர மறுத்துவிட்டார்.



தகவலறியும் உரிமைச் சட்டத்தின் 5 (1) (அ) மற்றும் 5 (1) (ஆ) (i) ஆகிய பிரிகளைக் காரணங்காட்டி RTI விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுள்ளது. அதாவது 5 (1) (அ) பிரிவின்படி முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அனுமதியின்றி கோரப்பட்டத் தகவல்களை வழங்க முடியாது எனவும், 5 (1) (ஆ) (i) பிரிவின்படி கோரப்பட்ட தகவல்களை வழங்குவது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் எனவும் குறிப்பிடப்பட்டு நிராகரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தகவல் அதிகாரியால் வழங்கப்பட்ட பதிலுக்கு எதிராக ஜனாதிபதி செயலகத்தின் குறித்தளிக்கப்பட்ட அதிகாரிக்கு மேன்முறையீடு செய்யப்பட்டிருந்தபோதிலும், குறித்தளிக்கப்பட்ட அதிகாரியிடமிருந்து விண்ணப்பம் கிடைத்துள்ளதை உறுதி செய்யும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கடிதமே 14.11.2022 அன்று கிடைத்திருந்தது. விண்ணப்பத்துக்கான பதில்கள் 14 நாட்கள் கடந்தும் வழங்கப்படவில்லை என்பதால் தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவில் இது தொடர்பில் மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளது.




## என்னைக் கொலை செய்யப்பார்த்தார்கள்

தமிழீழ விடுதலைப் புலிகள் செய்ததையே மக்கள் விடுதலை முன்னணியினரும் செய்ததாக தெரிவிக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் விமலவீர திஸாநாயக்க, ஜே.வி.பியினர் என்னை இருமுறை கொலை செய்யப்பார்த்தார்கள் எனவும் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று (21) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு கருத்து தெரிவித்தார். நாடு கடந்த காலங்களில் முகங்கொடுத்த பிரச்சினைகளில் இருந்து சற்று வழமைக்கு திரும்பியுள்ளது. முழுமையாக சரி செய்யப்படவில்லை என்றாலும் நிலைமைகள் ஓரளவுக்கு சரி செய்யப்பட்டுள்ளன. இந்த விடயத்தில் நாம் நேர்மையாகப் பேச வேண்டும். நாம் எதிர்க்கட்சியாக இருந்தபோதும் அரசாங்கம் எதனையுமே செய்யவில்லை என்றே கூறினோம். அதுபோலவே இப்போதுள்ள எதிர்க்கட்சியும் அரசாங்கம் எதனையும் செய்யவில்லை என்றே கூறுகிறது எனவும் தெரிவித்தார்.

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் திட்டமிட்டு மாகாணசபைகளுக்கான தேர்தலை அரசாங்கம் 3 வருடங்களுக்குக் காலந்தாழ்த்தியிருந்தது. அப்போது ஜே.வி.பி வாயை மூடிக்கொண்டு வேடிக்கைப் பார்த்துகொண்டிருந்தது. அதுபோல ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் உள்ளூராட்சிமன்ற தேர்தலுக்கான வேட்பாளர்களை தெரிவு செய்வதற்கான பணிகளை ஆரம்பித்துள்ளது. இதனை வேறெந்த கட்சியும் செய்கிறதா? நாம் தேர்தலுக்கு பயமில்லை. ஒன்று தோற்போம். ஒன்று வெற்றிபெறுவோம். இரண்டில் எதனையும் ஏற்றுக்கொள்ள நாம் தயார் எனவும் தெரிவித்தார்.

ஜே.வி.பி என்னை இருமுறை கொலை செய்யப் பார்த்தார்கள். நான் செய்த குற்றம் என்ன? அப்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினராகவும், பல்கலைக்கழக மாணவராகவும் இருந்தேன். ஜே.வி.பி செய்யதையே நாமும் செய்ய வேண்டும். ஜே.வி.பியின் கொள்கைளுக்கு எதிராகச் செயற்படுபவர்கள் தேசத்துரோகிகள் என்றே அவர்கள் கூறுவதாகவும் தெரிவித்தார்.

### எண்ணிக்கையை குறைத்தால்

## பாரிய சவால்களை எதிர்கொள்ள நேரிடும்

இனிவரும் காலங்களிலும் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களின் எண்ணிக்கையை அரைவாசியாக குறைக்கும் பட்சத்தில், சமூக ரீதியான மற்றும் இனரீதியான பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படும் எனவும், இதன் காரணமாக பாரிய சவால்ககளை எதிர்கொள்ள வேண்டிய சூழல் ஏற்படும் எனவும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் குறிப்பிட்டார்

உள்ளூராட்சி நிறுவனங்களின் வட்டார எல்லை நிர்ணயத்தை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள தேசிய எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரியவை, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் கொழும்பில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது, எல்லை நிர்ணயம் தொடர்பில் நாடளாவிய ரீதியில், மக்கள் காங்கிரஸ் கட்சியினால் நடாத்தப்பட்ட கலந்துரையாடல்களின் பின்னர், பொதுமக்களினாலும் பொது அமைப்புக்களினாலும் எல்லை நிர்ணய திருத்தம் சம்பந்தமாக, தமது கட்சிக்கு வழங்கப்பட்ட கோரிக்கைகள் அடங்கிய ஆவணத்தை, ஆணைக் குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரியவிடம் மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் கையளித்தார்.

அத்துடன், கடந்த முறை இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது, தேர்தல் முறையிலே குளறுபடிகள் இருந்ததினால், அந்தத் தேர்தல் முறையானது பாரிய தோல்வியை ஏற்படுத்தியது எனவும் ஆணைக்குழுவின் தலைவரிடம் மக்கள் காங்கிரஸ் தலைவர்



ரிஷாட் சுட்டிக்காட்டினார்.

இனிவரும் காலங்களிலும் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களின் எண்ணிக்கையை அரைவாசியாக குறைக்கும் பட்சத்தில், சமூக ரீதியான மற்றும் இனரீதியான பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படும் எனவும் தெரிவித்த அவர், இதன் காரணமாக பாரிய சவால்ககளை எதிர்கொள்ள வேண்டிய சூழல் ஏற்படும் எனவும் குறிப்பிட்டார்.

எனவே, பழைய விகிதாசார முறைப்படி தேர்தலை நடத்த வேண்டும் எனவும், அவ்வாறு நடத்துகின்ற பட்சத்தில் உறுப்பினர்களின் எண்ணிக்கையிலும் எதிர்பார்க்கின்ற அளவிலான குறைப்பை செய்ய முடியும் எனவும் எடுத்துரைத்தார். பழைய விகிதாசார தேர்தல் முறையை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதே தமது கட்சியின் இறுதி நிலைப்பாடு எனவும், அதற்குரிய சிபாரிசை எல்லை நிர்ணய ஆணைக் குழு அரசாங்கத்திடம் முன்வைக்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்த மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட், உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போட அனுமதிக்க வேண்டாம் எனவும் எல்லை நிர்ணய ஆணைக் குழுவின் தலைவரிடம் கோரிக்கை விடுத்தார்.

### மாணவர்கள் மத்தியில்

## போதைப்பொருள் பரவலை தடுக்க விசேட வேலைத்திட்டம்

விஷ போதைப்பொருள் மற்றும் அபாயகரமான ஔடதங்கள் பாவனையைத் தடுக்க ஜனாதிபதியின் விசேட செயலணியொன்றை ஸ்தாபிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

சிறைச்சாலை விவகாரங்கள், அரசியலமைப்பு மறுசீரமைப்பு, நீதித் துறை அமைச்சர் கலாநிதி விஜேதாச ராஜபக்ஷ மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஆகியோரின் தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. இச்செயலணியின் கீழ் போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள அனைத்து நிறுவனங்களையும் ஒருங்கிணைத்து, விஷ போதைப் பொருட்கள் மற்றும் அபாயகரமான ஔடதங்களின் பயன்பாட்டைத் தடுப்பதற்கான விசேட வேலைத்திட்டத்தை முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது. பாடசாலை மாணவர்கள் மத்தியில் போதைப்பொருள் பயன்பாடு அதிகரிக்கும் விடயம் தொடர்பில் இங்கு விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன் அதனைத் தடுப்பதற்குத் தேவையான அவசர நடவடிக்கைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

மேலும் போதைப்பொருள் பாவனையைத் தடுப்பது, போதைக்கு அடிமையானவர்கள் மற்றும் போதைப்பொருள் விற்பனையாளர்கள் ஆகியோரை அடையாளம் காண்பது, போதைக்கு அடிமையானவர்களுக்கு சிகிச்சை மற்றும் ஆலோசனை வழங்குவது குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. போதைப் பொருளுக்கு அடிமையாகி தற்போது சிறைச்சாலைகளில் உள்ளவர்கள் குறித்தும் அவர்களது எதிர்கால நடவடிக்கைகள், சிகிச்சைகள் தொடர்பிலும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

போதைப் பொருளுக்கு அடிமையானவர்களை மீட்பதற்காக முன்னெடுக்கப்படும் தன்னிச்சையான மையங்கள், சமூக புனர்வாழ்வு மையங்கள், நன்னடத்தை சேவை மையங்கள் ஆகியவற்றை வலுப்படுத்தவதற்கும் போதைக்கு அடிமையானவர்களின் புனர்வாழ்வு தொடர்பான சட்டத்தை இயற்றுவது குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

### காலநிலை மாற்றத்தை தணிக்கும்

## வெளிநாட்டு முதலீட்டாளர்களை வரவழைப்பதில் அரசு கவனம்

காலநிலை மாற்றத்தைக் குறைக்கும் திட்டங்களில் ஒன்றாக அதனை தணிக்கும் வகையிலான செயற்பாடுகளை முன்னெடுக்கும் வெளிநாட்டு முதலீட்டாளர்களை இலங்கைக்கு வரவழைப்பதில் அரசு கவனம் செலுத்தியுள்ளது. மீள் புதுப்பிக்கத்தக்க சக்தியின் 70 சதவீத இலக்கை அண்மித்தல், 2050இற்குள் காபன் மத்திய நிலையை (Carbon Neutrality) எட்டுதல், காபன் வெளியேற்ற அனுமதி பத்திரத்துக்கு பதிலாக சர்வதேச சந்தையைக் கண்டறிவது ஆகிய மூன்று இலக்குகளையும் அடைவதற்காக வெளிநாட்டு முதலீட்டாளர்களை வரவழைப்பதே அரசின் திட்டம் ஆகும்.

இது தொடர்பான கலந்துரையாடல் கடந்த (19) ஜனாதிபதி அலுவலகத்தில் காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜயவர்தன மற்றும் சர்வதேச காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. எதிர்கால எரிசக்தி ஆதாரங்கள், கார்பன் வெளியேற்றம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் ஹைட்ரஜன் போன்றவற்றின் மீதான தனது சர்வதேச அறிவை சொல்ஹெய்ம் இந்தக் கலந்துரையாடலுக்கு வந்திருந்த அதிகாரிகளுடன் பகிர்ந்து கொண்டார்.

புதுப்பிக்கத்தக்க சக்தி தொடர்பில் கருத்து தெரிவித்த எரிக் சொல்ஹெய்ம், இந்தியா, சீனா போன்ற நாடுகள் இதன்மூலம் அதிக நன்மைகளை பெற்றிருப்பதாகவும் அதே நன்மைகளை இலங்கையாலும் பெற முடியும் என்றும் சுட்டிக்காட்டினார். அத்துடன், நாட்டில் ஏற்பட்டுள்ள அனைத்து பிரச்சினைகளையும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்கள் தீர்த்து வைப்பார் என தாம் நம்புவதாகவும் சொல்ஹெய்ம் மேலும் சுட்டிக்காட்டினார்.

இங்கு உரையாற்றிய காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜயவர்தன, புதுப்பிக்கத்தக்க சக்தி மிக வேகமாக வளர்ந்து வரும் ஒரு துறை என்றும், ஐரோப்பா, அமெரிக்கா, கனடா உள்ளிட்ட ஏனைய நாடுகளில் இத்துறை சார்ந்த முதலீட்டாளர்கள் அதிகளவில் இருப்பதாகவும் தெரிவித்தார்.

எனவே இலங்கை மக்கள் பயன்பெறும் வகையில் அவ்வாறான முதலீடுகள் நாட்டுக்குள் கொண்டுவரப்பட வேண்டுமென சுட்டிக்காட்டிய ருவன் விஜயவர்தன, கொள்கைகளை உருவாக்கும் போது இது தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டுமெனவும் தெரிவித்தார். மேலும், புதுப்பிக்கத்தக்க சக்தி தொடர்பான மாநாடு ஒன்றை எதிர்காலத்தில் நடத்தவிருப்பதாகவும் அதன் ஊடாக முதலீட்டாளர்களை எமது நாட்டுக்கு ஈர்க்க முடியும் என நம்புவதாகவும் ருவன் விஜயவர்தன மேலும் குறிப்பிட்டார்.

## சிறந்தவை பிள்ளைகளுக்கு என்பது பொய்

சிறந்தவை பிள்ளைகளுக்கு என்று ஒரு பழமொழி உண்டு. ஆனால் பிள்ளைகள் சிறந்ததைப் பெறுகிறார்களா என்பதை நேர்மையாக சிந்திக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் சக்வல (பிரபஞ்சம்) வேலைத்திட்டத்தின் கீழ் 46 ஆவது கட்டமாக ஐம்பது இலட்சம் (5,000,000) ரூபாய் பெறுமதியான பாடசாலை பஸ் வண்டியொன்றை மதவாச்சிய மைத்திரிபால



சேனாநாயக்க மத்திய கல்லூரிக்கு வழங்கி வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சி தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

போஷாக்கான உணவுவேளையொன்று இல்லாத, கல்விக்குத் தேவையான வளங்களைப் பெற முடியாத பிள்ளைகள் உள்ள நாட்டில், சிறந்தவை பிள்ளைகளுக்கு என்ற கூற்று பொய்யானது எனவும் அவர் தெரிவித்தார். எமது நாட்டில் உலகாற்றல் அறிந்த திறமைசாலிகள் இருப்பதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், அவர்களிடமிருந்து நாட்டைக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றார்.

வெறும் தற்பெருமையால் தேசப்பற்றையோ அல்லது தேசிய அபிமானத்தையோ கட்டியெழுப்ப முடியாதெனவும், இலங்கைக்கு முதலிடும் என்கிற தொலைநோக்கிற்கேற்ப நாட்டைக் கட்டியெழுப்புவதையே உண்மையில் செய்ய வேண்டியது எனவும் தெரிவித்தார்.

முகத்துவாரங்களை திறக்க அவசர நடவடிக்கை

# அம்பாறையில் வெள்ள அபாயம்

எம்.எம் அஸ்லம்



அம்பாறை மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக தொடர்ச்சியாக பெய்து வருகின்ற அடைமழை காரணமாக, வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது.

கல்முனை, சாய்ந்தமருது, மாளிகைக்காடு, காரைதீவு, நிந்தவூர், மருதமுனை, பெரியநீலாவணை, பாண்டிருப்பு, நற்பிட்டிமுனை, சம்மாந்துறை, அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, ஒலுவில், பாலமுனை போன்ற பிரதேசங்களின் தாழ்நிலப் பகுதிகளில் வெள்ள அபாய நிலை ஏற்பட்டுள்ளதுடன் மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை (18) முற்பகல் தொடக்கம், இப்பிரதேசங்களில் பலத்த மழை பெய்து வருகின்றது. இதன் காரணமாக, சில இடங்களில் வெள்ளம் வீடுகளுக்குள்ளும் புகுந்துள்ளது. சாய்ந்தமருது, பொலிவேரியன் கிராமம் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. இங்கிருந்து வெள்ள நீரை அகற்றுவதற்காக, அப்பகுதியிலுள்ள பெரிய வாய்க்கால்கள் தோண்டப்பட்டு வருகின்றன.

அதேவேளை, கல்முனையையும் கொலனிப் பகுதிகளையும் இணைக்கும் கிட்டங்கிப்பால வீதி மற்றும் கல்முனை- அம்பாறை நெடுஞ்சாலையிலுள்ள மாவடிப்பள்ளி பாலம் என்பவற்றுக்கு மேலாக வெள்ளம் பாய்ந்தோடுவதால் போக்குவரத்துகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த வெள்ள நிலைமையை கருத்தில் கொண்டு, வெள்ள நீரை கடலுக்கு அனுப்புவதற்காக தேவையேற்படின் சாய்ந்தமருது பிரதான முகத்துவாரம் உட்பட கல்முனை மாநகர பிரதேசங்களிலுள்ள அனைத்து முகத்துவாரங்களையும் திறப்பதற்கு அவசர நடவடிக்கை எடுக்குமாறு மாநகர மேயர், சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

அத்துடன் ஏலவே துப்பரவு செய்யப்பட்டு, மீண்டும் குப்பைகளினாலும் மண் திட்டுகளினாலும் அடைபட்டுள்ள வடிகான்கள் துரிதமாக சீர்செய்யப்பட்டு வருவதுடன் குறுக்கு வீதிகளிலும் சிறிய ஒழுங்கைகளிலும் அமைந்துள்ள வீடு, வளவுகளில் இருந்து வெளியேற முடியாதிருக்கின்ற வெள்ள நீரை வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# “ஓவியத்தினூடாக இறைவனைக் காணலாம்”

வீரி சகாதேவராஜா



இந்தியா, தமிழ்நாட்டைச் சேர்ந்த புகழ்பெற்ற ஓவியர் பத்மவாசன் நேற்று முன்தினம் (20) மட்டக்களப்பு மாவட்டத்துக்கு விஜயம் செய்து, சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவனத்தில் பயிற்சி பட்டறையை நடத்தினார்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் ஆலயத்தில் குருகுல மாணவர்கள், அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கு விசேட கருத்தரங்கை நடத்தினார். ‘ஓவியத்தினுடாக இறைவனை காணலாம்’, ‘நாவலர் பெருமான் - வாழ்வும் வாக்கும்’ போன்ற தலைப்பில் வரைதலுடான கருத்துரை வழங்கப்பட்டது.

உலக ஓவியர் பத்மவாசன், சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜினால் பாராட்டி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

போரதீவுப்பற்றில்

# கர்ப்பிணிகளுக்கும் தாய்மார்களுக்கும் பால்மாபொதி

எம். எஸ். எம் நூர்தீன்



குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கான பால்மாப் பொதி வழங்கும் நிகழ்வு, போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் செல்வி இ. இராகுலநாயகியின் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் (20) நடைபெற்றது.

இந்நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் வி. துலாஞ்சனன், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ச. சசிகுமார், பாலையடிவட்டை இராணுவ முகாம் கேப்டன் நிமல் திஸாநாயக்க உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர். இதன்போது குறைந்த வருமானம் பெறும் 376 குடும்பங்களைச் சேர்ந்த கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு தலா இரண்டு பால்மா பொதிகள் வீதம் வழங்கப்பட்டன.

சாய்ந்தமருது கலாசார நிலைய

# முகாமைத்துவ சபையின் செயலாளர்

எம்.எம் அஸ்லம்



சாய்ந்தமருது கலாசார மத்திய நிலைய முகாமைத்துவ சபையின் செயலாளராக கலைஞர் அஸ்வான் ஷக்காப் மௌலானா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம் ஆஷிக் முன்னிலையில், கலாசார உத்தியோகத்தரும் மேற்படி மத்திய நிலையத்தின் பொறுப்பதிகாரியுமான யூ.கே.எம் றிம்ஸான் தலைமையில் இடம்பெற்ற இம்முகாமைத்துவ சபையின் அங்குரார்ப்பண நிகழ்வின்போதே அஸ்வான் இப்பதவிக்கு ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

மருதம் கலைக்கூடல் மன்றத்தின் ஸ்தாபகத் தலைவராகவும் சாய்ந்தமருது பிரதேச செயலக கலாசார அதிகார சபையின் பொருளாளராகவும் பணியாற்றி வருகின்ற அஸ்வான் மௌலானா, நாடகக் கலை பட்டறைக்கான வளவாளராகவும் அண்மையில் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

# சேவை நலன் பாராட்டு விழா



37 வருடகால கல்விச் சேவையில் இருந்து ஓய்வுபெறும் அதிபர் க. பேரின்பநாதனின் சேவையைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு நாளை (22) காலை 9.30 மணியளவில் மூதூர் பட்டித்திடல் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதன்போது ‘பேரின்பம்’ என்ற சிறப்பு மலரும் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

பொலன்னறுவ சுங்காவில் முஸ்லிம் வித்தியாலயத்தில் ஆசிரியராக 15.07.1985ஆம் ஆண்டு முதல் நியமனம் பெற்ற இவர் 1994ஆம் ஆண்டு மூதூர் - லிங்கபுரம் சரஸ்வதி வித்தியாலயத்தில் தரம் 2-II அதிபராகவும், 2010ஆம் ஆண்டு கிளிவெட்டி மகாவித்தியாலயத்தில் தரம் 2-I அதிபராகவும், 2015ஆம் ஆண்டு தொடக்கம் பட்டித்திடல் மகாவித்தியாலயத்தில் தரம் I அதிபராகவும் கடமையாற்றி வருகின்றார். இந்நிலையில் 2022.12.31 அன்று 37 வருடகால கல்விச் சேவையில் இருந்து ஓய்வு பெறுகின்றார்.

கொக்குத்தொடுவாய் மத்தியில்

# பூர்வீக காணிகளை அபகரிக்கும் முயற்சி

## மக்களின் எதிர்ப்பால் கைவிடப்பட்டது

செ. கீதாஞ்சன்



முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குத்தொடுவாய் மத்தி எனப்படும் தமிழ் மக்களுக்குச் சொந்தமான பூர்வீக காணிகளை, வனஜீவராசிகள் திணைக்களத்தின் ஆதரவுடன், வெலிஓயா பகுதியில் உள்ள நில அளவைத்திணைக்களத்தினர் குறித்த பகுதிக்கு வந்து, எல்லைக் கற்களை நாட்டியுள்ளார்கள். இதனை மக்கள் தடுத்து நிறுத்தியுள்ளதுடன் நாட்டப்பட்ட எல்லைக்கற்களையும் அகற்றவைத்துள்ளார்கள்.

கொக்குத்தொடுவாய் பிரதேசத்துக்கு உட்பட்ட கோட்டைக்கேணி பிள்ளையார் கோவில், அம்பட்டன் வாய்க்கால், வெள்ளைக்கல்லடி, குஞ்சுக்கால்வெளி, சிவந்தா முறிப்பு போன்ற பகுதிகளிலேயே மேற்படி எல்லை கற்கள் நாட்டப்பட்டிருந்தன.

இந்தச் சம்பவம் குறித்து மக்கள், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் து. ரவிகரனுக்கு முறையிட்டதுடன் அரச திணைக்கள அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்தினர்.

இன்னிலையில், திங்கட்கிழமை (19) கரைதுறைப்பற்று பிரதேச செயக உத்தியோகத்தர்கள், காணிப்பகுதி உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர் ஆகியோர் சம்பவ இடத்துக்கு பிரசன்னமாகிய நிலையில், குறித்த பகுதிக்கு வனஜீவராசிகள் திணைக்களத்தின் அதிகாரிகளும் நில அளவைத் திணைக்களத்தினரும் வருகை தந்துள்ளார்கள்.

இந்த எல்லைக்கற்கள் போடப்பட்ட இடங்கள் மக்களின் உறுதிக்காணி என்பதை மக்கள் மற்றும் கமக்கார அமைப்புகள் தெளிவு படுத்தியதுடன் அவர்கள் போட்ட கற்களையும் அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# பஸ் சேவைகள் இன்றி அரச ஊழியர்கள் பாதிப்பு

சண்முகம் தவசீலன்



முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய், மாந்தை கிழக்கு, மாங்குளம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து, மாவட்ட செயலகம் உள்ளிட்ட முக்கிய தேவைகள் நிமித்தம் முல்லைத்தீவு நகருக்கு செல்லும் பொதுமக்கள், ஒட்டுசுட்டான் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள அரச அலுவலகங்களுக்கு செல்லும் அரச அதிகாரிகள் உள்ளிட்டவர்கள், உரிய போக்குவரத்து வசதிகள் இன்றி தினமும் அல்லற்படுகின்றனர்.

காலை வேளையில் ஒருசில பஸ்கள் மாத்திரமே சேவையில் ஈடுபடுவதால், உரிய நேரத்தில் கடமைக்களுக்கும் தேவைகளுக்கும் செல்லும் உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

எனவே, உரிய தரப்பினர் பஸ் சேவைகளை அதிகரித்து, இருக்கிற சேவைகளைத் தடைகள், தடங்கல்கள் இன்றி, உரிய முறையில் வழங்க, உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# குடியிருக்கும் காணியைக் காப்பாற்றப் போராட்டம்

சுப்பிரமணியம் பாஸ்கரன்



பரந்தன் பிரதேசத்திற்கு உட்பட்ட குமரபுரம் பகுதியில், இரசாயன தொழிற்சாலைக்கான காணி எல்லையிடப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, கவனயீர்ப்பு போராட்டம் நேற்று (21) முன்னெடுக்கப்பட்டது.

குறித்த பகுதியில் உள்ள பரந்தன் இரசாயன கூட்டுத்தாபனத்துக்குக்கான காணிகள் எல்லையிடப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்தே மேற்படி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இவ்வாறு எல்லையிடப்பட்ட காணிகள் தாங்கள் நீண்ட காலமாக குடியிருந்து வருவதாகவும் தமது காணிகளையும் சேர்த்து, பரந்தன் இரசாயனத் தொழிற்சாலைக்கான காணி எனத் தெரிவித்து, எல்லையிட்டதுடன் நீண்ட காலமாக பயன்படுத்தி வந்த வீதியை மூடியுள்ளதாகவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

# தேசமான்ய விருது



சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) எஸ். குணபாலன் தேசமான்ய விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். கல்வி, கலை, கலாசாரம், அரசியல் போன்ற துறைகளில் நாட்டுக்கு பெரும் சேவையாற்றியவர்களை பாராட்டி கௌரவிக்கின்ற நிகழ்வு சனிக்கிழமை (17) பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றபோதே இவ்விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலையின்

# பொறுப்பு வைத்திய அதிகாரியாக டொக்டர் ப.பரணிதரன்

சண்முகம் தவசீலன்

புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரியாக வைத்திய கலாநிதி ப. பரணிதரன் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார்.

டொக்டர் ப. பரணிதரனை வரவேற்கும் நிகழ்வும், கடந்த ஐந்து வருடத்துக்கு மேலாக புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரியாக கடமையாற்றி, மாங்குளம் மலேரியா தடுப்பு பிரிவுக்கு பொறுப்பு வைத்திய அதிகாரியாக மாற்றலாகிச் செல்லும் வைத்திய கலாநிதி ப. தயானந்தரூபனைக் கௌரவிக்கும் நிகழ்வும் நேற்று முன்தினம் (20) நடைபெற்றது.



எதிர்கால வேலைகளுக்கு வலுவூட்டும் தொழில்நுட்பம்

# மாணவர்களுக்கு செயலமர்வு

எதிர்கால வேலைகளுக்கு வலுவூட்டும் தொழில்நுட்பம் பற்றிய செயலமர்வு யாழ். இந்துக் கல்லூரி, மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி, கிளிநொச்சி விவேகானந்தா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த 750 இற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு, ஐக்கிய அமெரிக்காவை தளமாக கொண்டியங்கும் அனைத்துலக மருத்துவ நல அமைப்பின் (IMHO-USA ) அனுசரணையில்



அவுஸ்திரேலியாவில் இருந்து வருகை தந்த ‘மெற்றா’, கூகுள் நிறுவன வல்லுநரான அடம்ஷாவால் அந்தந்தப் பாடசாலைகளில் செயலமர்வு நடத்தப்பட்டது.

மெய்நிகர் கூட்டங்களில் பங்கேற்கும் மற்றும் தகவல்களை பரிமாறும் நவீன




செயல்முறைகள் பற்றிய நேரடி அனுபவங்களும் மாணவர்களின் வினாக்களுக்கான விளக்கங்களும் அதன்போது வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அனைத்துலக மருத்துவ நல அமைப்பின் இலங்கைக்கான வதிவிட பணிப்பாளர் சு. கிருஷ்ணகுமார், பொறியியலாளர் ஹென்றி அமல்ராஜ் ஆகியோரால் இச்செயலமர்வுகளுக்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.





# ஸ்டொக்கம் முடக்கம்

■ ரஞ்சித் ராஜபக்‌ஷ

மஸ்கெலியா ஸ்டொக்கம் தோட்டத் தொழிலாளர்கள் தொழிற்சங்க நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

குறித்த தோட்டத் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் தேயிலைத் தூளை கொழும்பு- ஏல நடவடிக்கைக்கு அனுப்புவதற்கு தடையை ஏற்படுத்தும் தொழிற்சங்கப் பேராட்டத்தை செவ்வாய்க்கிழமை (20) ஆரம்பித்தனர்.

ஸ்டொக்கம் தோட்டத்திலுள்ள அதிகாரியொருவரை இடமாற்றம் செய்யவும் ஏனைய தோட்டங்களைச் சேர்ந்த தொழிலாளர்களை அழைத்து வந்து, தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுத்துதல் உள்ளிட்ட பல விடயங்களை முன்வைத்து இந்த தொழிற்சங்கப் பேராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான போராட்டம் ஒன்றும் தொழிற்சாலைக்கு முன்பாக செவ்வாய்க்கிழமை (20) முன்னெடுக்கப்பட்டது.

தமது கோரிக்கைகள் தொடர்பில் தோட்ட நிர்வாகத்திடம் முன்வைத்தும், இதுவரை தோட்ட நிர்வாகம் இதற்கான உரிய பதிலை வழங்கவில்லை என்றும் தமக்கு சாதகமான முடிவு கிடைக்கும் வரை ஒரு கிராம் தேயிலைத் தூளையேனும் தோட்டத்திலிருந்து வெளியே கொண்டுச் செல்ல அனுமதி தரப்போவதில்லை என தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## கொள்ளையர்களைப் பிடிக்கச் சென்ற

# பொலிஸ் அதிகாரி வைத்தியசாலையில்



கம்பளை- மரியவத்த மூன்றாம் குறுக்குத்தெரு பகுதியில் நடந்துச் சென்ற ஆசிரியர் ஒருவரின் தங்க மாலையைப் பறித்துக்கொண்டு, மோட்டார் சைக்கிளில் தப்பியோடிய சந்தேகநபர்கள் இருவரைத் துரத்திச் சென்ற பொலிஸ் அதிகாரியொருவர் சந்தேகநபர்களின் தாக்குதலுக்கு இலக்காகி கம்பளை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கம்பளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியான எம்.ரிஸ்வியே இவ்வாறு தாக்குதலுக்கு இலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பாடசாலை நிறைவடைந்து வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்த குறித்த ஆசிரியை வழிமறித்து, அவர் கழுத்தில் அணிந்திருந்த 5 இலட்சம் பெறுமதியான தங்க சங்கிலியை பறித்துச் சென்றுள்ளனர்.

இதன்போது ஹெரோய்ன் சுற்றிவளைப்புக்காக அந்த பகுதிக்குச் சென்றிருந்த பொலிஸ் அதிகாரி, நகையை பறித்துச் சென்ற சம்பவம் தொடர்பில் அறிந்து, கொள்ளையர்களை கம்பளை- கண்டி வீதியில் ஓட்டோவில் பின்தொடர்ந்து சென்றுள்ளார்.

பின்னர் போத்தலபிட்டிய பகுதியை அண்மித்த போது, குறித்த பொலிஸ் அதிகாரி கொள்ளையர்கள் பயணித்த மோட்டார் சைக்கிளில் மீது, ஓட்டோவை செலுத்தி சந்தேகநபர்களை தடுத்து, அவர்களை கைதுசெய்ய முயற்சித்துள்ளார்.

அத்துடன் அவர்களுக்கு விலங்கிடுவதற்காக அயலவர்களையும் உதவிக்கு அழைத்துள்ள போதிலும் எவரும் உதவி செய்வதற்கு முன் வரவில்லை என தெரியவந்துள்ளது.

இதன்போது சந்தேகநபர்கள் இருவரும் ஹெல்மட்டால் பொலிஸ் அதிகாரியை கடுமையாகத் தாக்கியதால் கடும் காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

பின்னர் சம்பவ இடத்துக்கு வருகைத் தந்த கம்பளை பொலிஸார் மேற்கொண்ட தேடுதலின் போது, ரயில் வீதியை அண்மித்த காட்டில் மறைந்திருந்த நிலையில் சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மேலும் சந்தேகநபர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள் களணி பகுதியிலிருந்து திருடப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய ஏனைய சந்தேகநபரைக் கைதுசெய்வதற்கான விசாரணைகளை கம்பளை பொலிஸார் முன்னெடுத்து வருவதாகத் தெரிவித்துள்ளனர்.



## இரசாயன கழிவால் மாணவர்களும் ஆசிரியர்களும்

# மூச்சுத் திணறலுக்கு உள்ளானார்கள்

■ எஸ்.கணேசன்

புஸ்ஸல்லாவை -சரஸ்வதி மத்திய கல்லூரியில் கல்விப் பயிலும் உயர்தர விஞ்ஞான மாணவர்கள் விஞ்ஞான ஆய்வுக் கூடத்தில் புதன்கிழமை (21) பரிசோதனை ஒன்றினை மேற்கொண்டிருந்த வேளையில், Bromin புரோமின் என்ற இரசாயன குவளை உடைந்ததன் காரணமாக மூச்சுத் திணறலுக்கு உள்ளாகியுள்ளனர்.

இரசாயனம் ஆய்வுக்கூடம் முழுவதும் பரவியுள்ளதால், அங்கிருந்த ஐந்து மாணவர்களும் மூன்று ஆசிரியர்களும் பாதிப்புக்கு உள்ளாகி மூச்சுத் திணறல் காரணமாக புஸ்ஸல்லாவை வகுக்கப்பட்டிய வைத்தியசாலை அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நிலமையினை கட்டுப்பாட்டு கொண்டு வரும் நோக்கில், கண்டி தீயணைக்கும் பிரிவினர் பாடசாலைக்கு விரைந்துள்ள அதே நேரம் இரசாயனத்தை அப்புறப்படுத்தும் செயல்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர்.

ஏனைய மாணவர்களை பாடசாலை நிர்வாகம் உடனடியாக அப்புறப்படுத்தியுள்ள அதேநேரம் அவர்களை பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் விரைந்து செயல்பட்ட பாடசாலை அதிபர் கம்பளை கல்வி வலயத்திற்கும், மாகாண கல்வி பணிமனைக்கும் புஸ்ஸலாவ பொலிஸாருக்கும் அறிவித்ததன் பயனாக மேலதிக விசாரணைகளை புஸ்ஸலாவை பொலிஸார் கம்பளை பொலிஸ் அத்தியட்சகருடன் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர்.



# கையளிப்பு...



றொட்டரக்ட் பேன்கொழும்பு நிறுவனத்தின் நிதி பங்களிப்பில், தலவாக்கலை -கிறேட்வெஸ்டன் பாடசாலையில் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட மலசலகூடங்கள் நேற்று (21) மாணவர்களின் பாவனைக்காக திறந்துவைக்கப்பட்டன. பாடசாலையின் அதிபர் எம்.ஐ.எம்.பாரிஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில்,, றொட்டரக்ட் பேன்கொழும்பு நிறுவனத்தின் தலைவர் நலீஸ்,றொட்டரக்ட் பேன்கொழும்பு நிறுவனத்தின் நிகழ்ச்சி திட்ட முகாமையாளர் பெயித், ஆசிரிய ஆலோசகர் ரவீந்திரன், ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்துக்கொண்டனர். (பி.கேதீஸ்)

## நுவரெலியா– சீதையம்மன் ஆலயத்தில்

# இந்திய தமிழ் குருக்களால் ஞாயிறன்று விசேட பூஜை

■ டி.ஷங்கீதன்

நுவரெலியா- சீதையம்மன் ஆலயத்தின் விசேட பூஜை எதிர்வரும் 25ஆம் திகதி இந்திய தமிழ் குருக்களால் நடாத்தப்படுகின்றது.

இந்தியாவின் தமிழ்நாடு கோயம்புத்தூர் நகரில் இருந்து வருகை தருகின்ற, பிரபல தமிழ்மொழி குருக்கள் ராஜேந்திரன், நுவரெலியா சீதையம்மன் ஆலயம் உட்பட மலையகத்தின் பல்வேறு ஆலயங்களிலும் பூஜை வழிபாடுகளை நடாத்தவுள்ளார்.

ஆவேலியா முத்துமாரியம்மன், ஸ்ரீ சீத்தாஎலிய சீதையம்மன் ஆலயம் என்பவற்றின் சபை தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணனின் அழைப்பின் பேரில், குறித்த குருக்கள் எதிர்வரும் 23 ஆம் திகதி இலங்கைக்கு வருகை தருகின்றார்.

இவருடன் கோயம்புத்தூர் ரோட்டறி கழகத்தின் முன்னாள் தலைவரும் ரோட்டறி வலய பணிப்பாளருமான (மாவட்டம் ) தண்டபானி ஜெயகாந்தனும் வருகை தரவுள்ளார்.

மலையக மக்கள் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வருகை தந்து எதிர்வரும் 2023 ஆண்டுடன் 200 வருடங்களை பூர்த்தியாவதை முன்னிட்டும் இலங்கையில் தற்பொழுது ஏற்பட்டுள்ள பொருளாதார பின்னடைவில் இருந்து நாடு சுபீட்சம் பெறவும் மலையக மக்களுக்கும் இலங்கையின் ஏனைய சமூகங்களுக்கு ஆசி வேண்டியும் இந்த விசேட பூஜை வழிபாடுகள் நடைபெறவுள்ளன.

24 ஆம் திகதி கொழும்பு வெள்ளவத்தையில் அமைந்துள்ள கங்காதீஸ்வரர் யாக பீடத்தில் பீடத்தின் ஸ்தாபகரும் பிரபல மனவள ஆலோசகருமான சாமி கங்காதரன் தலைமையில், விசேட பூஜை நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. காலை 12 மணியளவில் இந்த பூஜை நடைபெறவுள்ளது.

25 ஆம் திகதி காலை 11.30 மணிக்கு சீத்தாஎலிய சீதையம்மன் ஆலயத்தில் ஆலயத்தின் தலைவர் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்களின் பங்குபற்றுதலுடன் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன. பக்தர்கள் கலந்து கொண்டு ஆசி பெற்றுக் கொள்ளலாம்.

25 ஆம் திகதி மாலை 3.00 மணியளவில் தலவாக்கலை முருகன் ஆலயத்தில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது.

தவிர மேலும் சில ஆலயங்களில் பூஜை வழிபாடுகள் நடைபெறவுள்ளதுடன், எதிர்வரும் 29 ஆம் திகதி இவர் இந்தியாவிற்கு பயணமாகவுள்ளார்.



## கொட்டகலை மாணவர்களின்

# புத்தகப் பைகளும் சோதனை

■ எஸ்.கணேசன்

பாடசாலை மாணவர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளதாக கடந்த காலங்களில் இருந்து தெரிவிக்கப்பட்டு வருகின்ற நிலையில், பாடசாலைகளை கண்காணிக்கும் வகையில் கல்வி அமைச்சு மற்றும் இலங்கை பொலிஸார் ஒன்றிணைந்து முன்னெடுத்து வரும் போதைப்பொருள் சோதனை நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

நாட்டில் பல்வேறு பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் நேற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நுவரெலியா பிரதான பொலிஸ் அத்தியட்சகர் புத்தி உடுகமசூரியவின் பணிப்புரையின் கீழ், நுவரெலியா வலயக் கல்விப் பணிப்பாளரின் அனுமதியுடன் பெருந்தோட்ட பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் போதைப்பொருள் சோதனை நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

அந்தவகையில் கொட்டகலை நகர பாடசாலைகளில் நேற்று(21) சோதனைகள் நடைபெற்றன.

கொட்டகலை கேம்பிரிட்ஜ் கல்லூரியிலும், கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயத்திலும் இந்த போதைப்பொருள் சோதனை நடவடிக்கைகள் இடம்பெற்றன.

தனித்தனியாக பாடசாலை மாணவர்களது புத்தகப் பைகள் சோதனை செய்யப்பட்டதுடன், உடைகளும் சோதனை செய்யப்பட்டன.

குறித்த பிரதான பாடசாலைகளின் அதிபர்களின் அனுமதியுடன், கொட்டகலை ஐக்கிய வர்த்தக சங்கத்தின் போதைப்பொருள் ஒழிப்புபிரிவு குழுவின் பங்குபற்றலுடன் திம்புள்ள -பத்தனை பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி தலைமையிலான விசேட பொலிஸ் குழுவின் மூலம் மாணவர்கள் சோதனை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# குப்பைகளால் நிறையும் சிவனொளிபாதமலை

■ செ.தி.பெருமாள்



டிசெம்பர் 7 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட சிவனொளிபாதமலை யாத்திரை பருவ காலம் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பிக்கப்பட்டு, 15 தினங்களில் சிவனொளிபாதமலை அடிவாரம் முதல் உச்சி வரை உள்ள பகுதிகளில் குப்பைகள் நிறைந்து காணப்படுகின்றன.

சிவனொளிபாதமலை மற்றும் அதனை அண்மித்த பகுதிகள் சுற்றாடல் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி வருவதாக இது சிவனொளிபாதமலைக்குப் பொறுப்பான பெங்கமு தம்மதின்ன தேரர், தெரிவித்துள்ளதுடன், ஆரம்ப காலத்தில் சகல அதிகாரிகளையும் ஒன்றிணைத்து இது தொடர்பில் கலந்துரையாடியுள்ளார். அதற்கமைய, சிவனொளிபாதமலைக்கு வரும் யாத்திரிகர்கள், தமது எதிர்கால சந்ததிக்காக அபூர்வமாக இருக்கும் இந்த மலையைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். எனவே, மலை உச்சியில் இருந்து அடிவாரம் வரை உள்ள பகுதிகளில் குப்பைகளை வீசி எறிய வேண்டாம் எனவும் தரிசனம் செய்ய வரும் யாத்திரிகர்கள் மலைக்கு வரும் போது பிளாஸ்டிக் போத்தல்கள், பொலித்தீன் குப்பைகள் போன்றவற்றை எடுத்து வர வேண்டாம் என்றும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதனை அறிவுறுத்தும் வகையில் குறித்த பகுதியில் பதாகைகள் பொருத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

## மொனராகலை மாவட்டத்தில்

# போக்குவரத்து சேவைகள் தொடர்பில் முக்கிய பேச்சு

■ சுமணசிறி குணதிலக

மொனராகலை மாவட்டத்தில் சேவையில் ஈடுபடும் இ.போ.ச பஸ்கள், தனியார் பஸ் சேவைகள் உள்ளிட்ட ஏனைய போக்குவரத்து சேவைகள் தொடர்பான கலந்துரையாடல் செவ்வாய்க்கிழமை (20) மாவட்ட போக்குவரத்து குழு கூட்டம் ஒன்று மொனராகலை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

மொனராகலை மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் தலைவர் மற்றும் போக்குவரத்து குழுவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான குமாரசிறி ரத்னாயக்க தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மொனராகலை மாவட்ட பதில் ஆளுநர் கே. பிரகீத் கலந்து கொண்டார்.

இதன்போது போக்குவரத்து நடவடிக்கைகளுடன் தொடர்புடைய சட்டரீதியான நிலைமை, போக்குவரத்தில் காணப்படும் சிக்கல்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட பயணிகளுக்கு சிறந்த சேவையைப் பெற்றுக்கொடுக்குமாறு போக்குவரத்து பிரிவினருக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

மேலும் இலங்கை போக்குவரத்து சபைக்குரிய பஸ்களில் சாரதிகள் மற்றும் நடத்தனர்களுக்கு பாரிய பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் அன்றாட போக்குவரத்து சேவைகளை முன்னெடுப்பதில் பாரிய சிக்கல்கள் ஏற்படுவதாகவும் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## நுவரெலியா மாவட்டத்தின்

# 12ஆவது நடமாடும் சேவை

■ எஸ். கே. குமார்

நுவரெலியா மாவட்டத்தின் 2022 ஆம் ஆண்டின் 12ஆவது நடமாடும் சேவை அம்பகமுவ பிரதேச செயலகப் பிரிவில் நேற்றுமுன் தினம் (20) நடைபெற்றது.

இதற்கமைய, அம்பகமுவ பிரதேச செயலகப் பிரிவின் ஹிட்டிகே, ஹகரபிட்டிய ,மினுவந்தெனிய, ஜம்புதென்ன, கொட்டேல்லென ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக இந்த நடமாடும் சேவை நடத்தப்பட்டது.

நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபடவின் பணிப்புரையின் கீழ் அம்பகமுவ. பிரதேச செயலாளர் திருமதி சிதாரா கமகே தலைமையில் நடைபெற்ற இந்த நடமாடும் சேவையில், வயது முதிர்ந்தவர்களுக்கான அடையாள அட்டை வழங்கல், பிறப்பு, இறப்பு சான்றிதழ் வழங்குதல், திருமணங்களைப் பதிவு செய்தல், பாடசாலைக்கு செல்லாத குழந்தைகளை பாடசாலைக்கு அனுப்புதல், உள்ளிட்ட பல சேவைகள் முன்னெடுக்கப்பட்டன.

## லுணுகலை பிரதேச சபை

# மொட்டு வசமானது

■ ராமு தனராஜா

லுணுகலை பிரதேச சபையின் புதிய தவிசாளரை தேர்ந்தெடுக்கும் வாக்கெடுப்பில், ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுனவை சேர்ந்த ஒருவரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்த ஒருவருமாக இருவர் போட்டியிட்டனர்.

இதில் ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுனவை சேர்ந்த L..P.N.U.A. அநுரவிக்ரமதுங்க மேலதிக மூன்று வாக்குகளால் தவிசாளராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இவருக்கு ஆதரவாக ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த 7 உறுப்பினர்களும் ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுனவை சேர்ந்த 3 உறுப்பினர்களும் வாக்களித்தனர்.

இந்த நிலையில், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியியைப் பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியிட்ட R.W.P.L.U. எட்வினுக்கு 7 வாக்குகளே கிடைக்கப்பெற்றன.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் மூவரும் ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுன உறுப்பினர்கள் இருவரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உறுப்பினர்கள் இருவருமாக மொத்தமாக 7 வாக்களித்துள்ளனர்.

மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர் ஒருவரும் மலையக மக்கள் முன்னணியின் ஒருவரும் ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுனவை சேர்ந்த ஒருவரும் நடுநிலை வகித்தனர். 2023 ஆம் ஆண்டு வரவு- செலவு திட்டத்திற்கான வாக்கெடுப்பின் போது லுணுகலை பிரதேச சபை 2 தடவைகள் தோல்வியடைந்த நிலையிலேயே புதிய தவிசாளர் ஒருவர் தேர்ந்தெடுக்க ப்பட்டுள்ளார்.

# மரணிக்கும் கண்கண்ட சாட்சிகளும் உறவுகளின் கோரிக்கைகளும்

பிரச்சினைகளை ஆராய்வதற்கு குழுக்களை நியமித்தல், அதன் அறிக்கைகள், பரிந்துரைகளை மீளாய்வுக்கு உட்படுத்த நிபுணர் குழுக்களை நியமித்தல் என்பதெல்லாம், பிரச்சினைகளை அடியோடு மூடி மறைத்து, பூசிமெழுகுவதற்காகக் கடைப்பிடிக்கப்படும் கைங்கரியங்களாகும் என்பது கடந்தகால கசப்பான வரலாறாகும்.

யுத்தம் நிறைவுக்கு கொண்டுவரப்பட்டதன் பின்னர், தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக சர்வகட்சி மாநாடு, அதன்பின்னர் உண்மையைக் கண்டறிவதற்கான குழுக்கள், கற்றுக்கொண்ட பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக்குழு என நியமிக்கப்பட்ட குழுக்களை அடுக்கிக்கொண்டே போகலாம். அந்தளவுக்கு குழுக்களும் அறிக்கைகளும் உள்ளன.

அந்தக் குழுக்கள், சர்வதேசத்தின் கண்களில் மண்ணைத் தூவவும், ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடருக்கு படம் காட்டுவதற்காகவுமே நியமிக்கப்பட்டு, அதில் இரண்டொரு பரிந்துரைகள் மட்டுமே அரைகுறையாக அமல்படுத்தப்பட்டன. இந்த நாடகம், இன்றும் மீண்டும் அரங்கேற்றப்படுகிறது.

இதற்கிடையே, காணாமல் போனவர்களைத் தேடியலைந்து திரியும் உறவினர்கள் பலர் நோய்வாய்ப்பட்டும், வயது முதிர்வாலும் மரணித்துவிட்டார்கள். அவர்களில் பலர், தங்களுடைய உறவினர்களை நேரடியாகவே படையினரிடம் கையளித்த கண்கண்ட சாட்சிகளாவர். எனினும், காணாமல் போனோர் அலுவலகத்தால் விசாரணைகள் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன. சாட்சியமளிக்கும் போது கண்ணீர்விட்டுக் கதறியழுத பலரது கண்களிலும் கண்ணீர் வற்றிவிட்டது. அந்தளவுக்கு எங்கெல்லாம் சென்று, சாட்சியமளிக்க முடியுமோ, அங்கெல்லாம் சென்று கதறியழுது சாட்சியமளித்துள்ளனர்.

எனினும், முல்லைத்தீவு மாவட்டத்தில் டிசெம்பர் 19, 20ஆம் திகதிகளில் சாட்சியமளிப்பதற்காக மீண்டும் அழைக்கப்பட்டிருந்தனர். இதனால், அங்கு பெரும் களேபரமே ஏற்பட்டது. வருகைதந்திருந்த அதிகாரிகளுக்கு எதிரான கடுமையான எதிர்ப்புகளால், வெளியேறும் வாசல் வழியாகவே உள்நுழைய வேண்டிய நிர்ப்பந்தம் அந்த அதிகாரிகளுக்கு ஏற்பட்டிருந்தது. “காணாமலாக்கப்பட்ட தங்களுடைய உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை அறியவேண்டும்; நட்டஈடு வேண்டாம்; சர்வதேசமே நீதியைப் பெற்றுத்தரவேண்டும்” என உறவினர்கள் வலியுறுத்துகின்றனர்.

இந்நிலையில்தான், “காணாமல் ஆக்கப்பட்டோரை கொன்றுவிட்டீர்கள் என்பது எனக்குத் தெரியும்” என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் அண்மையில் தெரிவித்திருந்தார் எனக் குறிப்பிட்டுள்ள வவுனியா மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களது சங்க செயலாளர் சி. ஜெனிட்டா, அவரையே ஒரு சாட்சியாக வைத்து, இனப்படுகொலையாளிகளை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்த வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

கைகளால் பிடித்து, கண்முன்னே ஒப்படைக்கப்பட்ட உறவினர்களுக்கு நடந்தது என்னவென்பதை கண்டறியவதற்கு, தொடர்ச்சியாக வாக்குமூலங்களை பெற்றுக்கொள்ள முயல்வது, உண்மையை மண்ணோடு புதைக்கும் செயற்பாடாகும். ஆகையால், வழங்கப்பப்பட்ட சாட்சிகளின் அடிப்படையில், தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டும். மீண்டும், மீண்டும் விசாரணைகள், புதிய, புதிய குழுக்கள் எல்லாமே, உண்மையை முற்றாக மறைப்பதற்கான ஆயுதங்களாகும் என்பதால், சாட்சிகளின் அடிப்படையில் நியாயமான தீர்வை வழங்கவேண்டும்.

தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

பொய்மையாளர்களின் வாழ்க்கை, புரட்டி வீசப்பட்டுவிடும். அற்பமான காரியங்களைக் கூச்சமே இல்லாமல் செயபவர்களுக்கு தங்களின் எதிர்காலம் குறித்து கிஞ்சித்தும் நினைப்பதில்லை.

சீராக வாழ்பவர்களின் வாழ்க்கை ஒருபோதும் சோர்வடையாது. தங்களின் ஆட்சி மட்டும் நிலையாக இருக்கவேண்டும் என எண்ணும் தலைவர்கள், தாங்கள் நேர்மையுடன் வாழ்பவர்கள் எனப் பிரசாரம் செய்வார்கள். இவர்கள், நீதி பற்றிய எண்ணங்களை கழுவித்துடைத்து விடுகின்றனர்.

நீதியின் வெப்பம் பற்றி அறியாமல் இருப்பதுவே கெட்டவர்களின் குணமாகும். ஆட்டம் போடும் அரசுகள், எதிர்காலத்தில் தமது ஆயுள் குறுகியது எனத் தெரியாமல் இருப்பது அதிசயம்.

பூமியைக் கடவுள் இரட்சிக்கின்றார் எனச் சொல்லும் உலகம், தவறு செய்த எவரையும் காக்கும் கடவுள் தண்டிக்காமல் விடுவதுமில்லை என்பதை உணரவதில்லை. இதையே அனைத்து மதங்களும் வலியுறுத்துகின்றன.

வாழ்க்கையில் தோல்வியுற்றால், அதற்காக தீயவழியில், மாற்று வழிகளைச் செய்யக்கூடாது. அந்த எண்ணங்கள் ஆபத்தானவை. தனியொரு மனிதன் செய்த தவறுகளால், பலர் துன்பப்படலாகாது. பழி வாங்க எண்ணுவது இழிவு.

பருத்தியூர் பாலை. வயிரவநாதன்

சொல்ஹெய்மின் மீள்வருகை:

# தமிழ்த் தரப்புக்கான பொறி

புருஜோத்தமன் தங்கமயில்

இலங்கைக்கான நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், அடிக்கடி கொழும்பு வந்து இராஜதந்திர ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த சந்திப்புகளை நடத்திச் செல்கின்றார்.

ஜனாதிபதி ரணில், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் , கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் உள்ளிட்டவர்களை, கடந்த சில நாள்களுக்கு முன்னரும் சந்தித்துச் சென்றிருக்கின்றார். இந்தச் சந்திப்புகள் அனைத்திலும், அண்மையில் நடைபெற்ற சர்வகட்சித் மாநாட்டில் உரையாடப்பட்ட, இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயங்கள் பற்றிப் பேசப்பட்டிருக்கின்றன.

எதிர்வரும் சுதந்திர தினத்துக்கு முன்னராக, இனப்பிரச்சினைக்கான தீர்வு காணப்பட வேண்டும் என்கிற அவசரத்தை ரணில் காட்டுகின்றார். சுதந்திரத்துக்கு முந்தைய இலங்கையில் தோன்றிவிட்ட தமிழர் அரசியல் பிரச்சினைக்கு, சுமார் இரண்டு மாத கால இடைவெளிக்குள் தீர்வு காண்பது என்பது, நடக்கக் கூடிய காரியமல்ல!

அப்படியான நிலையில், ரணில் காட்டும் அவசரத்துக்குப் பின்னாலுள்ள சூட்சுமங்களை அவதானிப்பது, பாதிக்கப்பட்ட தரப்பின் பிரதிநிதிகளாக பேச்சுவார்த்தை மேடைகளிலும் இராஜதந்திர ஊடாட்டங்களிலும் அமரும் கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ்த் தேசிய தரப்புக்களுக்கு முக்கியமானது.

சம்பந்தனுக்கும் சொல்ஹெய்முக்கும் இடையிலான சந்திப்பு, திங்கட்கிழமை (19) இடம்பெற்று சில மணி நேரங்களிலேயே, தமிழ்த் தேசிய கட்சிகளின் தலைவர்களை சந்திப்புக்கு வருமாறு ரணில் அழைத்தார். அதன் பிரகாரம், புதன்கிழமை மாலை அந்தச் சந்திப்பு இடம்பெற்றிருக்கின்றது. சம்பந்தன், எம்.ஏ சுமந்திரன், தர்மலிங்கம் சித்தார்த்தன் உள்ளிட்டோர் அதில் கலந்து கொண்டனர். சி.வி விக்னேஸ்வரனும், செல்வம் அடைக்கலநாதனும் கொழும்பில் இல்லாத காரணத்தால் சந்திப்பில் கலந்து கொள்ளவில்லை. கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் அவரது கட்சியும் வழக்கமாக பேச்சுகளை புறக்கணிப்பதால், அவர்கள் இந்தச் சந்திப்புக்கு அழைக்கப்பட்டார்களா இல்லை என்பது தெளிவில்லை. ஆனால், அவர்கள் கலந்து கொள்ளவில்லை.

ஜனாதிபதியாக ரணில் பதவியேற்றதும், இலங்கைக்கான நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவரான எரிக் சொல்ஹெய்மை, காலநிலை தொடர்பான தனது சர்வதேச ஆலோசகராக அவர் நியமித்தார்.

இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் முறிந்துவிட்ட பின்னர், சொல்ஹெய்ம் நோர்வேயில் சில காலம் அமைச்சராகப் பணியாற்றினார். பின்னரான நாள்களில் அவர், இந்தியாவை முன்னிறுத்திக் கொண்டு சுற்றுச்சசூழல் பாதுகாப்பு, காலநிலை அவதானிப்பு தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்தார். அவர், இப்போது தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.க ஸ்டாலினின் ஆலோசகர் பொறுப்பிலும் இருக்கிறார்.

அப்படியான நிலையில்தான், ரணில் மீண்டும் பதவிக்கு வந்ததும் சொல்ஹெய்முக்கு ஆலோசகர் பொறுப்பொன்றை வழங்கி, இலங்கை விவகாரங்களில் நேரடியாகப் பங்கெடுப்பதற்கான முக்கியஸ்தாராக அழைத்திருக்கின்றார்.

தென் இலங்கையின் அரசியல் பிடுங்குப்பாடுகளில் சிக்காமல் இருப்பதற்காகவே, சொல்ஹெய்முக்கு ‘காலநிலை தொடர்பான சர்வதேச ஆலோசகர் பதவி’ என்கிற பெயரில் ஒரு பதவி வழங்கப்பட்டிருக்கின்றது. ஆனால், அவரின் உண்மையான பணி அல்லது அவசியம் என்பது, சர்வதேச ரீதியில் இலங்கை இன்று சந்தித்து நிற்கும் நெருக்கடிகளில் இருந்து மீட்டெடுப்பதாகும்.

அதன்போக்கில், தமிழர் அரசியல் பிரச்சினைக்கான தீர்வு என்கிற விடயம் முக்கியமாகக் கருதப்பட்டு, அவை தொடர்பிலான பேச்சுகள் மீள ஆரம்பிக்கப்பட்டு இருக்கின்றன. சொல்ஹெய்ம், தனக்கு வழங்கப்பட்ட தூதுவர் பொறுப்பை அனைத்துக் காலங்களிலும், அந்தப் பொறுப்பை வழங்கிய தரப்புகளுக்கு சாதகமாக முடித்துக் கொடுத்திருக்கின்றார். அதனால்தான், புதிய பதவிப் பெயரோடு, மீண்டும் சொல்ஹெய்மை ரணில் அழைத்து வந்திருக்கின்றார்.

காலநிலை தொடர்பான ஆலோசகராக ரணிலால் சொல்ஹெய்ம் நியமிக்கப்பட்டாலும், அது தொடர்பிலான எந்தச் செயற்பாட்டிலும் அவர் இலங்கை தொடர்பில் ஈடுபடவில்லை. மாறாக, இலங்கை வந்த அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பிலேயே அவர் கவனம் செலுத்தியிருக்கின்றார்.

காலநிலை மாற்றங்கள், சுற்றுச்சூழல் மாசுபாட்டால் நாடுகளுக்கு இடையில் பிணக்குகள் ஏற்பட்டு பிளவுகள் ஏற்படுவதுண்டு. அப்படியான பிணக்குகளை சுற்றுச் சூழலியலாளர்களும் இராஜதந்திரகளும் பேச்சுவார்த்தைகளை நடத்தி முடித்துக் கொள்வது உலக வழக்கம்தான்.

ஆனால், இலங்கையின் இனமுரண்பாடு என்பது, சுற்றுச்சூழலியலாளர்கள் தீர்த்து வைக்கும் அளவுக்கானது அல்ல. அது, பௌத்த சிங்கள மேலாதிக்கக்க அடக்குமுறைகளால் எழுந்தது. அதைக் கையாள்வது என்பது, இலகுவான ஒன்றுமல்ல. ஏனெனில், இலங்கையில் ஆட்சி அதிகாரங்களை அடைவதற்கான ஒற்றை வழி, பௌத்த -சிங்கள மேலாதிக்க சிந்தனையின் வழியாக இயங்குவதும், இயக்குவதுமாகும்.

அப்படியான நிலையில், அந்த மனநிலையை மாற்றாமல், முரண்பாடுகளுக்கு தீர்வு காண்பது என்பது நடக்கக் கூடிய காரியமல்ல. அப்படியான நிலையில், சொல்ஹெய்மின் மீள்வருகையை ‘கண்ணில் எண்ணெய் ஊற்றிக் கொண்டு’ கவனித்தாக வேண்டும்.

சொல்ஹெய்ம் நோர்வேயில் இருந்து கொழும்புக்கு வரும் வழியிலோ, அல்லது திரும்பிச் செல்லும் போதே புதுடெல்லியில் தங்கி, இந்திய இராஜதந்திரிகளைச் சந்திப்பது வழக்கமான செயற்பாடு. இது, இலங்கை அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை இடம்பெற்ற காலத்திலேயே வழக்கம்.

சொல்ஹெய்மின் மீள் வருகை என்பது புதுடெல்லியின் ஆசிர்வாதம் இல்லாமல் ரணிலால் நிகழ்த்தப்பட்ட ஒன்றாகவும் கருத வேண்டியதில்லை. சொல்ஹெய்ம், புதுடெல்லியை தன்னுடைய இன்னொரு வாழ்விடம் மாதிரியே கையாண்டு வருகின்றார். அவருக்கு புதுடெல்லியின் இராதஜந்திர தரப்புகளோடு இருக்கும் இணக்கமும் நெருக்கமும், இங்குள்ள எந்த தமிழ்த் தேசிய கட்சிகளுக்கும் இல்லை. தமிழ்க் கட்சிகளால் இராஜதந்திர ரீதியாக இந்தியாவின் முக்கிய தரப்புகளை கையாள முடியவில்லை.

எப்போதுமே, இலகுவாக கையாளக் கூடிய தரப்புகளை, அதாவது அடிமை சேவகம் செய்யக்கூடிய தரப்புகளை இராஜதந்திர கட்டமைப்பு, கடைநிலையில் வைத்தே அணுகும். முக்கிய தீர்மானங்களை எல்லாம் எடுத்துவிட்டு, அதனை செய்வதற்கான ஏவல் தரப்புகளாக மட்டுமே கையாள நினைக்கும். அப்படியான நிலையில், தமிழ்க் கட்சிகளின் புதுடெல்லியுடனான உறவு என்பது, பெரும்பாலும் ஏஜமானுக்கும் ஏவலாளிக்கும் இடையிலானது பொன்றதே! அதனாலும், சொல்ஹெய்மின் நடவடிக்கைகளை கவனிக்க வேண்டியது தவிர்க்க முடியாதது.

இந்தியப் புலனாய்வுத் துறையின் மூத்த அதிகாரி ஒருவர், இரகசியமாக ரணிலை சந்தித்துச் சென்ற விடயம் கொழும்பில் புகைந்து கொண்டிருக்கின்றது. பொருளாதார ரீதியில் பெரும் பின்னடைவுகளைச் சந்திக்காத ஒரு சூழல் நிலவுமாக இருந்தால், இந்தியா புலனாய்வுத்துறை அதிகாரியின் வருகையை தென் இலங்கை பெரிய விடயமாக்கி ரணிலை அலைக்கழித்திருக்கும். ஆனால், தற்போதைய நெருக்கடி நிலைமை, தென் இலங்கை கட்சிகளையும், பௌத்த சிங்கள மேலாதிக்க தரப்புகளை எல்லாம் வாயை மூடிக்கொண்டிருக்க வைத்திருக்கின்றன.

அடுத்த ஆண்டு முதல் தொடர்ச்சியான தேர்தல்களை, நாடு எதிர்கொள்ளப் போகின்றது. தென் இலங்கையின் உணர்நிலை, ராஜபக்ஷர்களுக்கும் ரணிலுக்கும் எதிரானதாகவே இப்போது இருக்கின்றது. அதனால், அதனை மாற்றுவதற்கான உத்திகளின் போக்கிலும், சொல்ஹெய்மைக் கொண்டு விடயங்களை ரணில் கையாள நினைக்கின்றார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்ஷர்களின் ஆதரவோடு ரணில் போட்டியிடுவார். ஆனால், அந்த ஆதரவு நிலை, அவருக்கு வெற்றியை பெற்றுக்கொடுக்க போதுமானதாக இருக்காது. எப்படியும், சஜித் அவரின் வெற்றியை தென் இலங்கை வாக்குகளைக் கொண்டு தடுப்பார். அந்த வாக்குகளோடு, வடக்கு கிழக்கு மக்களின் வாக்கும் இணைந்தால் சஜித் இலகுவாக வென்றுவிடுவார்.

அந்த நிலையை உணர்ந்து கொண்டுதான், வடக்கு கிழக்கு வாக்குகளை கணிசமாக கவர்ந்திழுக்கும் நோக்கில், இரண்டு மாதங்களுக்கு தீர்வு என்ற விடயத்தை ரணில் கையாளத் தொடங்கி இருக்கின்றார். அதன்மூலம், தமிழ்த் தரப்புகளை முழுமையாக தன் பக்கத்துக்கு நகர்த்த முடியாவிட்டாலும், பகுதி பகுதிகளாக உடைத்து விடவாவது முடியும் என்பது அவரது எதிர்பார்ப்பு.

தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கு, தான் பதவியேற்ற குறுகிய காலத்துக்குள்ளேயே தீர்வை வழங்கிவிட்டேன் என்ற பிம்பத்தை நிறுவி, மேற்குநாடுகளை இலகுவாக கையாள ரணில் இன்னொரு பக்கம் முனைகிறார். அதன் மூலம் பொருளாதார பின்னடைவுகளில் இருந்து உதவிகளைப் பெற்று விடுபட முடியும்.

தென் இலங்கை இப்போது எதிர்பார்ப்பது பொருளாதார பின்னடைவில் இருந்து மீட்பதற்கான ஒரு மீட்பரையே! அப்படியான நிலையில், தமிழர்களுக்கு தீர்வு என்ற ஒரு கல்லைக் கொண்டு, இரண்டு மூன்று காய்களை அடிக்க நினைக்கிறார் ரணில். அவரின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றவே சொல்ஹெய்ம் வந்திருக்கிறார்.

இதைப் புரிந்து கொண்டு கவனமாகச் செயற்பட வேண்டியது, பொறுப்புள்ள தமிழ்த் தரப்புகளின் முதல் வேலை. இதைப் புறந்தள்ளிவிட்டு நின்று, தமிழ் மக்களின் தலைகளில் அழுகிய மூட்டைகளை ஏற்றிவைக்கக் கூடாது.

## கழதங்கள்

கிளிநொச்சி பொதுச் சந்தை:

### நெருக்கடிக்குள் தேங்காய் வியாபாரிகள்



கிளிநொச்சி பொதுச் சந்தைக்குள் தேங்காய் வியாபாரிகள், கூறுவிலை கோரல் மேற்கொள்ளும் இடத்தில், மழை காரணமாக நெருக்கடியை சந்தித்துவருவதாக கவலை தெரிவித்துள்ளனர்.

பொருத்தமற்ற இடம்காரணமாக, மழைக் காலங்களில் சேறும் சுரியுமாகக் காணப்படுகிறது என்றும், அத்தோடு அருகில் உள்ள மலசல கூடங்களிலிருந்து வெளியேறும் நீர் சேர்ந்து காணப்படுவதாகவும் தேங்காய் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். இதனால் கொள்வனவு மற்றும் விற்பனையில் ஈடுப்படுவதில் நெருக்கடியும் அசௌகரியங்களும் நிறைந்திருப்பதாகவும் அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கரைச்சி பிரதேச சபையின் கீழ் குறித்த சந்தை, கிளிநொச்சி மாவட்டத்துக்கான பொதுச் சந்தையாகவும் காணப்படுவதோடு, நாளாந்தம் பெருமளவான கொள்வனவாளர்களும் விற்பனையாளர்களும் ஒன்று கூடுகின்ற சந்தையாகவும் விளங்குகிறது.

எனவே, கரைச்சி பிரதேச சபையினர் இதனை கருத்தில் எடுத்து, உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்றும் வியாபாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மு. தமிழ்ச்செல்வன்

# பாலை நிலமும் ஈழத்துக் கண்களும்





சங்கீர்த்தனா அருளானந்தம்
( யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்)

ஈழத்துப் படைப்புகள் என்றால் அதை ஈழத்தில் உள்ள மக்களே அதிகம் நாடுவதில்லை. காரணம் என்னவென்றால் தமிழ்நாட்டு படைப்புகளை பார்த்து ரசித்த ஈழத்துக் கண்கள் ஈழத்து படைப்புகளை ஒரு விருந்தாக எண்ணுவதில்லை. ஆனாலும் எம் ஈழத்துக் கலைஞர்களும் சலிப்பதில்லை.

தொடர்ச்சியாக எம் நாட்டு படைப்புகள் வந்த வண்ணமே உள்ளன. அந்த வரிசையில் தற்போது ஈழத்து முழு நீள திரைப்படங்கள் சற்று தலைதூக்க ஆரம்பித்துள்ளன. குறுந்திரைப்படங்கள், பாடல்கள், காணொளிகள், முழு நீளத் திரைப்படங்கள் என தொடர்ச்சியாக வந்த வண்ணமே காணப்படுகின்றன.

ஒரு மரம் வளர வேண்டுமானால் அதற்கு நிச்சயமாக நீர் தேவைப்படும். அந்த நீராக ரசிகர்களும் மரமாக கலைஞர்களும் இருக்கும் பட்சத்தில் ஒரு செழிப்பான சூழல் உருவாகும். அந்த வகையில் தான் தற்போது ஈழத்து படைப்புகள் உலக அளவில் சற்று வெளிவர ஆரம்பித்துள்ளன. உள்நாட்டு படைப்புகளையும் மக்கள் ஓரளவு ஏற்றுக்கொள்ள ஆரம்பித்துள்ளனர்.

முழு நீள திரைப்படங்கள் எனும் போது அது ஒரு மிகப்பெரிய படைப்பாக இருக்கிறது. இலங்கையில் தற்போது முழு நீள திரைப்படங்கள் தழைக்க ஆரம்பித்துள்ளன. அந்த வகையில் தற்போது வெளிவந்த ஒரு முழுநீள திரைப்படமாக "பாலை நிலம்" திரைப்படம் காணப்படுகிறது.

இலங்கையில் ஒரு முழு நீள திரைப்படம் படைக்கப்படுவது என்பதே பெரியதொரு வெற்றியாகும். அப்படி இருக்கும்போது பலரின் விமர்சனங்களுக்கும் ஒரு படைப்பு உட்படுகிறது. எந்த ஒரு படைப்பும் விமர்சனப் பார்வையில் பார்க்கப்படும் போது தான் அந்தப் படைப்பின் தாற்பரியம் மக்களுக்கு விளங்கக் கூடியதாக இருக்கும்.

எந்த ஒரு படைப்பிற்கும் தவறான விமர்சனம் கொடுக்கும் முன்பதாக அதை ஒரு படைப்பாகவும் அதற்குப் பின்னால் இருக்கும் உழைப்பையும் கருத்தில் கொண்டு பார்த்தோமேயானால் அந்த படைப்பிற்கான வெற்றி சிறிதளவேனும் கிடைக்கும்.

ஆனால் இங்கே கவனிக்கப்பட வேண்டிய ஒரு விடயமாக ஒரு படைப்பை நாம் வெளியில் கொண்டு வரும் முன்னே அது பார்வையாளர்களின் நோக்கில் இருந்து படைப்பாளிகள் பார்க்க வேண்டும் என்பது எனது கருத்து. அவ்வாறு பார்வையாளர்களின் நோக்கில் இருந்து பார்க்கும் பட்சத்தில் நிச்சயமாக அந்த படைப்பு வெற்றி பெறும்.



பாலைநிலம் திரைப்படமானது ஈழத்து இயக்குனர் யூட்சுகி அவர்களினால் எடுக்கப்பட்ட ஒரு திரைப்படமாகும். " ஒரு யுத்த சூழலில் எதிர்கொண்ட இன்னல்களையும் அதற்குள்ளும் ஒரு காதல் எவ்வாறு தோன்றி நகர்ந்தது" என்பதையும் எடுத்துக்காட்டும் ஒரு திரைப்படமாகும்.

கதை, திரைக்கதை மற்றும் ஒளிப்பதிவு போன்றவற்றையும் யூட்சுகி அவர்களே மேற்கொண்டுள்ளார். இத்திரைப்படம் யுத்த சூழலில் காணப்படும் மக்களின் மனங்களை வெளிப்படுத்த முயற்சித்த ஒரு திரைப்படமாக காணப்படுகின்றது.

ஏதோ ஒரு விடயத்தை மக்களுக்கு கொடுக்க முனைந்த இயக்குனர் யூட்சுகி அவர்களுக்கு வாழ்த்துக்கள். எனது பார்வையில் இந்த திரைப்படத்தினை பார்க்கும்போது திரைப்படத்தில் ஒரு கதையை சொல்ல இயக்குனர் முயன்றிருந்தாலும் ஒரு நிலையான கருத்தை உறுதியாக வெளிப்படுத்திருக்கலாம் என்பது எனது நிலையாக உள்ளது.

இந்த பாலை நிலம் திரைப்படத்தைப் பற்றி ஈழத்து மக்களிடம் சில கருத்துக்களை கேட்ட பொழுது பல்வேறுபட்ட கருத்துக்களை அவர்கள் தெரிவித்திருந்தார்கள்.

இந்த திரைப்படத்தை பார்த்த பொழுது எம்முள் யுத்த கால நினைவுகள் எழுந்தன என்று திரைப்படத்தை பார்த்த ஒரு ரசிகர் கூறியிருந்தார். மேலும் திரைப்படத்திற்கு அமைத்த இசையமைப்பு என்பது மிகவும் சிறப்பாக அமைந்தது என்றும் பல ரசிகர்கள் கூறியிருந்தார்கள்.

யுத்த காலச்சூழலில் ஒரு காதல் எவ்வாறு காணப்பட்டது என்பதை மிக ஆழமாக காட்டி இருக்கலாம் என்பது வெளிப்படை. ஒரு நினைவு அடிப்படையில் அது நகர்ந்து கொண்டு போனாலும் தேவையில்லாத காட்சிகள் அதிகம் காணப்பட்டது. அத்தோடு பார்வையாளர்கள் மத்தியில் ஒரு சுவாரஸ்ய போக்கு சற்று குறைவாகவே காணப்பட்டது .நான் ஒரு பார்வையாளராக இருந்து கூறப்போனால் பாலை நிலம் திரைப்படத்தின் இசையமைப்பு அந்த படத்தின் மிகப்பெரிய பலமென்று கூறலாமென ஒரு பார்வையாளர் கூறியிருந்தார்.



> **இயக்குனருக்கும் நடிகர்களுக்கும் மற்றும் பணியாற்றிய அனைவருக்கும் நன்றிகளும் வாழ்த்துக்களும் தெரிவிக்க விரும்புகின்றேன்.**

யுத்த காலத்தில் பாதிக்கப்பட்ட மக்களிடையே இப்படம் ஒரு சிறிய தாக்கத்தை ஏற்படுத்தி இருப்பதை நாங்கள் அந்த மக்கள் கூறிய கருத்துக்களை வைத்து அறியக் கூடியதாக இருந்தது.

இந்தப் பாலைநிலம் திரைப்படத்தில் கதையின் நோக்கம் சிதறவிடப்பட்டிருப்பதை பார்வையாளர்களால் புரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது என்றும் படத்தின் இயக்குனர் யுட்சுகி அவர்கள் அவரின் நோக்கம் சார்ந்து திரைப்படத்தை எடுத்திருந்தாலும் இளைஞர்கள் மத்தியில் ஒரு முழுமையடையாத தன்மை இருப்பதை திரையரங்குகளில் காணக்கூடியதாக இருந்தது என்றும் அந்த ஒரு பார்வையாளர் கூறியிருந்தார்.

ஏனெனில் ஆரம்பத்தில் கூறியது போல தமிழ்நாட்டு திரைப்படங்களை பார்த்து பழகிய இளைஞர்களின் கண்கள் நம் நாட்டு படைப்புகளை முழுமையாக ஏற்க தவறிவிட்டது என்றும் அவர் கூறியிருந்தார்.

எந்த ஒரு படைப்பாக இருந்தாலும் விமர்சனங்கள் என்பது பொதுவானது. அந்த விமர்சனங்கள் குறிப்பிட்ட படைப்பிற்கு நன்மையானதாகவும் அமையலாம். எதிரானதாகவும் அமையலாம். அவ்வாறே பாலை நிலம் திரைப்படத்திற்கு எழுந்த விமர்சனங்களும் உள்ளன.

இத்திரைப்படத்தை பார்க்கும்போது எமக்கு யுத்த காலத்தில் ஏற்பட்ட பல இன்னல்களும் துன்பங்களும் எம் நினைவுக்கு வந்து போனது என்று ஒரு பாட்டி என்னிடம் கூறியிருந்தார்.

திரைப்படத்தின் கதையோட்டம் என்பது இயக்குனர் கூறமுடைந்த கதையிலிருந்து சற்று விலகிப் போயுள்ளது. அத்தோடு கதைக்கு தேவையற்ற சில காட்சிகள் வைக்கப்பட்டுள்ளன என்றும் தேவையற்ற விபரங்களை கொடுத்து கதையின் நோக்கத்தை சிதறவிட்டுள்ளார் இயக்குனர் என்றும் இன்னொரு பார்வையாளர் தனது கருத்தை தெரிவித்திருந்தார்.

மேலும் பாலைநிலம் திரைப்படம் பற்றி கூறினால் அந்த திரைப்படத்தின் இசை பெரியதொரு வலுவாக இருந்தது எனச் சொல்லலாம். அத்தோடு பாலைவனம் திரைப்படத்தில் விவரங்களை அதிகமாக காட்டியிருக்காமல் இருந்திருந்தால் திரைப்படம் மேலும் சிறப்பாக இருந்திருக்கும் என ஒரு ரசிகர் கூறியிருந்தார்.

விமர்சனங்கள் என்பது அனைத்து படைப்பிற்கும் பொதுவான ஒன்று. அப்படி பார்க்கும்போது பாலை நிலம் படத்திற்கும் விமர்சனங்கள் எழுந்த நிலையில் அது ஒரு சிறந்த முயற்சியாக இருப்பது எம் அனைவருக்கும் ஒரு பெருமையாக இருக்கிறது. அத்துடன் மேலும் இது போன்ற சிறந்த முயற்சிகளும் படைப்புகளும் எம் நாட்டில் எழ வேண்டும் என்பது எனது கருத்தாகவும் இருக்கிறது.

முழுமையாக பார்த்தால் சிறந்ததொரு முயற்சியாக இந்த பாலைவனம் திரைப்படம் காணப்படுகிறது. இயக்குனருக்கும் நடிகர்களுக்கும் மற்றும் பணியாற்றிய அனைவருக்கும் நன்றிகளும் வாழ்த்துக்களும் தெரிவிக்க விரும்புகின்றேன். அத்தோடு இதுபோன்ற படைப்புகள் மேலும் உருவாக வேண்டும் என்பதே எமது அவாவாகவும் உள்ளது.

ஆந்திரா

# ஆந்திராவில் பழைய தொழிலுக்கு மவுசு

“இந்தியாவிலேயே ஆந்திர மாநிலத்தில் தான் அதிகளவான பூர்விக பாலியல் தொழிலாளர்கள் உள்ளனர் “ என மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் அண்மையில் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இத்தகவல் வெளியாகியுள்ளது.

குறித்த அறிக்கையின்படி,” பூர்வீக பாலியல் தொழிலாளர்கள் அதிகம் உள்ள மாநிலங்களில் சுமார் 1.33 லட்சம் பேருடன் ஆந்திரா முதலிடத்தில் உள்ளது எனவும், புலம்பெயர்ந்த ஒட்டுமொத்த பாலியல் தொழிலாளர்களின் எண்ணிக்கையைப் பொறுத்தவரை, மராட்டிய மாநிலம் 6.6 லட்சம் பேருடன் முதலிடத்தில் உள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இது அடையாளம் காணப்பட்ட பாலியல் தொழிலாளர்களின் எண்ணிக்கை எனவும், ஆயிரக்கணக்கானவர்கள் இன்னும் அடையாளம் காணப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே சமயம் பல தசாப்தங்களாக ஆந்திர மாநிலம் விபசாரத்திற்கான மனித கடத்தலின் முக்கிய இடமாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.





ஒடிசா

# நோயாளிக்கு மதுபானம் கொடுத்த அம்புலன்ஸ் சாரதி

ஒடிசாவில், மரத்தில் இருந்து கீழே விழுந்த ஒருவரை ஏற்றிக் கொண்டு வைத்திய சாலையை நோக்கிச் சென்றுகொண்டிருந்த அம்புலன்ஸ் சாரதியொருவர், குறித்த நோயாளியுடன் சேர்ந்து மதுபானம் அருந்திய சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இச் சம்பவத்தின்போது, குறித்த நோயாளியுடன் பெண் ஒருவரும், சிறுவனொருவனும் இருந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இருவரும் வீதியில் அம்பூலன்ஸை நிறுத்தி மதுபானம் அருந்திய வீடியோவானது இணையத்தில் வைரலாகி பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் குறித்த நோயாளியே, சாரதியிடம் மதுபானம் அருந்தத் தருமாறு வற்புறுத்தியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்தியப் பிரதேசம்

# ‘தூய்மை இந்தியா‘ திட்டத்தின் தூதரான சிறுவன்

மத்தியப் பிரதேசத்தில், கட்னி மாவட்டத்தின் ‘தூய்மை இந்தியா திட்டத்தின்‘ தூதராக 13 வயதுச் சிறுவனொருவன் நியமிக்கப்பட்டுள்ள சம்பவம் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

9ஆம் தரத்தில் கல்வி கற்கும் ‘அசுதோஷ் மாங்கே ‘ என்ற குறித்த சிறுவன் அண்மையில் ‘குப்பை வண்டிகளைப் பராமரிப்பது மற்றும் பொதுத் தூய்மை‘ குறித்த தன்னுடைய ஆலோசனைகளை அஞ்சல் அட்டையில் எழுதி மாவட்ட கலெக்டருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

அக்கடிதத்தை படித்த பின்னர், அசுதோஷை தனது அலுவலகத்திற்கு வரவழைத்த கலெக்டர் அவி பிரசாத், அவரை கட்னி மாவட்டத்தின் தூய்மை இந்தியா திட்டத்தின் தூதராக நியமித்தார்.

இது குறித்து கலெக்டர் கூறும்போது, “கடிதத்தில் இருந்த ஆலோசனைகளைப் படித்த பின்னர், அதை எழுதிய சிறுவனை சந்திக்க விரும்பினேன்.

அவரைச் சந்தித்த போது, அவர் மிகவும் திறமையாகவும் நம்பிக்கையாகவும் இருப்பதைக் கண்டேன்.

எனவே, அவரை கட்னியின் தூய்மை இந்தியா திட்டத்தின் தூதராக நியமிக்க முடிவு செய்தேன்" எனத் தெரிவித்துள்ளார்.



திருப்பதி

# பல்கலைக்கழகத்தில் நடமாடும் சிறுத்தை

திருப்பதியில் உள்ள ஸ்ரீ வெங்கடேஷ்வரா கால்நடை பல்கலைக்கழக வளாகத்தில் சிறுத்தையின் அட்டகாசம் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருப்பதி மலை அடிவாரத்தில் செயற்பட்டுவரும் குறித்த கால்நடை பல்கலைக்கழகத்தில் அண்மைக்காலமாக வனவிலங்குகள் உலா வருவது அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் நேற்று முன்தினம் இரவு சிறுத்தையொன்று, நாய் ஒன்றை வேட்டையாடி அதன் உடல் பாகங்களைப் பல்கலைகழக வளாகத்திற்குள் விட்டுச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் சிறுத்தையின் நடமாட்டத்தால் தங்களது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும், அசம்பாவிதங்கள் ஏற்படுவதற்கு முன்னர், நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி கல்லூரி வளாகம் முன்பு மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





கே. கே நகர்

# காவித்துண்டுடன் எம்.ஜி.ஆர்

கே.கே.நகர் அருகே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஸ்தாபகரும், முன்னாள் தமிழக முதலமைச்சருமான எம்.ஜி.ஆரின் உருவச்சிலை நிறுவப்பட்டுள்ளது.

குறித்த சிலையை அ.தி.மு.க பொதுச்செயலாளராக இருந்த மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா கடந்த 2001ஆம் ஆண்டு திறந்து வைத்தார்.

ஜெயலலிதா மறைந்த பின்னர் எம்.ஜி.ஆர். சிலை அருகே ஜெயலலிதாவின் சிலையும் நிறுவப்பட்டது. இந்நிலையில், குறித்த எம்.ஜி.ஆர். சிலைக்கு நேற்று முன்தினம் மர்ம நபர்கள் சிலர் காவித்துண்டு அணிவித்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதனைக் கண்டு அதிர்ச்சியடைந்த அ.தி.மு.கவினர், இது குறித்துபொலிஸ் நிலையத்தில் புகார் அளித்துள்ள



நிலையில், அச்சிலையில் மீது இருந்த காவித்துண்டை அகற்றிய பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

ஆப்கானிஸ்தான்

# பல்கலைக்கழகங்களில் பெண்களுக்குத் தடை

ஆப்கானிஸ்தானில் கடந்த வருடம் தலிபான்கள் ஆட்சியைக் கைப்பற்றியதிலிருந்து அங்கு பல்வேறு கடுமையான கட்டுப்பாடுகளை விதித்து வருகின்றனர்.

குறிப்பாக பெண்களின் அடிப்படை உரிமைகளைப் பறிக்கும் விதமாக பல்வேறு கட்டுப்பாடுகளை தலிபான் அரசு விதித்து வருகின்றது.

அதிலும் குறிப்பாக பெண்கள் ஆண்களின் துணையின்றி வெளியே செல்வதற்கும், உடற்பயிற்சி நிலையங்கள் மற்றும் பூங்காவுக்குச் செல்வதற்கும், உயர் கல்வி கற்பதற்கும், விளம்பரங்களில் நடிப்பதற்கும், தொலைக்காட்சிகளில் தோன்றுவதற்கும் தலிப்பான் அரசு தடை விதித்திருந்தமை சர்வதேச அளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்து.

இந்நிலையில் அண்மையில் ஆப்கானிஸ்தானில் உள்ள பல்கலைக்கழகங்களில் கல்வி கற்க பெண்களுக்கு தலிபான் அரசு இடைக் காலத் தடை விதித்துள்ளமை குறித்து அமெரிக்கா தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வெள்ளை மாளிகையின் செய்தித்



தொடர்பாளர் அட்ரியன் வாட்சன் வெளியிட்டுள்ள அறிக்கையில், " பல்கலைக்கழகங்களில் பெண்கள் கல்வி கற்க இடைக்காலத் தடை விதித்தமை குறித்து அமெரிக்கா கண்டிக்கிறது.

ஆப்கானிஸ்தான் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு ஆதரவாகவும், அந்நாட்டு மக்களுக்கு மனிதாபிமான ஆதரவை வழங்குவதற்கும் நாம் தொடர்ந்து முயற்சிகளை எடுத்து வருகிறோம்" இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான்

## திடீரென வெடித்த கனரக வாகனம்; 19 பேர் உயிரிழப்பு

ஆப்கானிஸ்தானின், பர்வான் மாகாணத்தில் உள்ள சலாங் சுரங்கப்பாதையில் நேற்று முன்தினம்(19) எண்ணெய் ஏற்றிவந்த கனரக வாகனமொன்று திடீரென தீப்பிடித்து விபத்துக்குள்ளானதில் அப்பகுதியில் இருந்த 19 பேர் உடல் கருகி உயிரிழந்தனர்.

இவ் விபத்தில் 30 க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.






இத்தாலி

## லம்போர்கினியில் சிறுநீரகம்

நூற்றுக்கணக்கான கிலோமீற்றர் தொலைவில் உள்ள நோயாளிகளுக்கு சிறுநீரகங்களை வழங்குவதற்காக பிரத்யேகமாக மாற்றியமைக்கப்பட்ட லம்போர்கினி சூப்பர் காரை இத்தாலிய பொலிஸார் பயன்படுத்தியுள்ளமை மக்கள் மத்தியில் வரவேற்பைப் பெற்றுள்ளது.

இத்தாலியின் வடகிழக்கில் உள்ள படுவாவிலிருந்து மொடெனா மற்றும் ரோம் ஆகிய இடங்களில் உள்ள மருத்துவமனைகளுக்கே குறித்த சிறுநீரகங்கள் கொண்டுசெல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இது குறித்து பொலிஸார் வெளியிட்டுள்ள பதிவில், " இரண்டு பேருக்கு சிறுநீரகம் பரிசாக வழங்கப்பட்டது. அவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் மகிழ்ச்சியான மற்றும் அமைதியான கிறிஸ்துமசை கொண்டாட முடியும் என்று நம்புகிறோம்" என்று பதிவிட்டுள்ளனர்.

அமெரிக்கா

## முடிவுக்கு வந்தது ஜோனிடெப்-ஆம்பர்ஹெர்ட் வழக்கு



பிரபல ஹொலிவூட் நடிகரான ஜோனிடெப் உடனான அனைத்து வழக்குகளையும், 1 மில்லியன் அமெரிக்க டொலரை நஷ்ட ஈடாக வழங்கி முடித்துக்கொள்வதாக, நடிகையும், அவரது முன்னாள் மனைவியுமான 'ஆம்பர்ஹெர்ட்' அறிவித்துள்ளார்.

இருவரும் கடந்த 2015ஆம் ஆண்டு திருமணம் செய்துக்கொண்ட நிலையில், 2016ஆம் ஆண்டிலேயே ஒருவர் மீது ஒருவர் குற்றஞ்சாட்டியிருந்ததோடு பரஸ்பரமான நஷ்ட ஈட்டு வழக்கையும் தொடுத்திருந்தனர்.

தனித்தனியாக நடைபெற்ற வழக்கில், இருவருமே ஒருவருக்கொருவர் இழப்பீடு வழங்க நீதிமன்றம் உத்தரவிட்ட நிலையில், சுமார் 6 ஆண்டுகளாக நடைபெற்றுவரும் அனைத்து வழக்குகளையும் சமரச தீர்வு அடிப்படையில் இருவரும் முடித்துக்கொள்வதாக, ஆம்பர் அறிவித்ததை, ஜோனிடெப்பின் வழக்கறிஞர்களும் ஏற்றுக்கொண்டனர்.

இவ்வருடத்தில் அதிகம் தேடப்பட்ட பிரபலங்களின் பட்டியலில் முதல் இடத்தில் ஆம்பர் ஹெர்ட்டும் 2 ஆவது இடத்தில் ஜோனி டெப் உள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

எலோன்

## பதவி விலகும் எலோன் மஸ்க்



உலகின் பெரும் பணக்காரர்களில் ஒருவரான எலோன் மஸ்க், டுவிட்டர் தலைமை நிர்வாக அதிகாரி என்ற பொறுப்பில் இருந்து விரைவில் விலகவுள்ளதாக அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில்," ஒரு முட்டாளை விரைவில் கண்டறிந்த பின்னர் டுவிட்டரின் CEO பதவியிலிருந்து இராஜினாமா செய்யவுள்ளேன்.

அடுமட்டுமல்லாது இதனையடுத்து சாஃப்ட்வேர் மற்றும் சர்வர்ஸ் குழுக்களை இயக்கவுள்ளேன்" எனத் தெரிவித்துள்ளார். கடந்த சில நாட்களுக்கு முன்னர் டுவிட்டரின் தலைமை நிர்வாக அதிகாரி பொறுப்பில் இருந்து தான் விலக வேண்டுமா? என எலான் மஸ்க் நடத்திய வாக்கெடுப்பில் 57.5 சதவீதம் பேர், பதவி விலக வேண்டும் எனவும், 42.5 சதவீதம் பேர் பதவி விலக வேண்டாம் என்றும் வாக்களித்திருந்தனர். இதனையடுத்தே அவர் இவ்அறிவிப்பை வெளியிட்டு இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ரொனால்டோவின் சாதனையை முறியடித்த மெஸ்ஸி

காற்பந்து ரசிகர்களின் அபிமானத்தைப் பெற்ற FIFA 2022 உலகக்கோப்பைத் தொடரானது கடந்த 20 ஆம் திகதி கட்டாரில் கோலாகலமாக ஆரம்பமாகி கடந்த (18) நிறைவடைந்தது.

அந்த வகையில் விறுவிறுப்பாக நடைபெற்ற இறுதிப் போட்டியில் பிரான்ஸ் அணியை வீழ்த்தி பிரபல காற்பந்து வீரரான மெஸ்ஸியின் ஆர்ஜென்டீனா அணி சம்பியனானது.

இப்போட்டியை உலகம் முழுவதும் உள்ள கோடிக்கணக்கான காற்பந்து ரசிகர்கள் நேரில் சென்றும் தொலைக்காட்சியிலும்,சமூக ஊடகங்களிலும் பார்வையிட்டனர்.

இந்நிலையில் உலகக்கோப்பையை ஏந்தியபடி, இன்ஸ்டாகிராமில் மெஸ்ஸி பதிவேற்றிய புகைப்படமானது ஐந்தரை கோடி லைக்குகளைப் பெற்று சாதனை படைத்துள்ளது.

விளையாட்டு வீரர் ஒருவர் பதிவேற்றிய புகைப்படத்திற்கு இத்தனை லைக்குகள் கிடைப்பது,






இதுவே முதல்முறை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்குமுன்னர் லூயி வுய்டோன் ஆடை நிறுவன விளம்பரத்திற்காக மெஸ்ஸியுடன் செஸ் விளையாடுவதுபோல் கிறிஸ்டியானோ ரொனால்டோ பதிவேற்றிய புகைப்படம், 4.25 கோடி லைக்குகளைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

டெஸ்ட் போட்டிகளுக்கான துடுப்பாட்டவீரர்களின்

# தரவரிசையில் இரண்டாமிடத்துக்கு முன்னேறிய அஸாம்

சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் போட்டிகளுக்கான துடுப்பாட்டவீரர்களின் தரவரிசையில் இரண்டாமிடத்துக்கு பாகிஸ்தானின் அணித்தலைவர் பாபர் அஸாம் முன்னேறியுள்ளார்.

இங்கிலாந்துக்கெதிரான மூன்றாவது டெஸ்டில் 132 ஓட்டங்களைப் பெற்றமையைத் தொடர்ந்தே மூன்றாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி இரண்டாமிடத்தைப் பிடித்திருந்தார்.

இதேவேளை, தென்னாபிரிக்காவுக்கெதிரான முதலாவது டெஸ்டில் 92 ஓட்டங்களைப் பெற்ற அவுஸ்திரேலியாவின் ட்ரெவிஸ் ஹெட், ஏழாமிடத்திலிருந்து மூன்று இடங்கள் முன்னேறி நான்காமிடத்தை அடைந்துள்ளார்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

மர்னுஸ் லபுஷைன், 2. பாபர் அஸாம், 3. ஸ்டீவ் ஸ்மித், 4. ட்ரெவிஸ் ஹெட், 5.



ஜோ றூட், 6. றிஷப் பண்ட், 7. கேன் வில்லியம்ஸன், 8. திமுத் கருணாரத்ன, 9. றோஹித் ஷர்மா, 10. உஸ்மான் கவஜா.

இதேவேளை, மேற்குறிப்பிட்ட டெஸ்டில் 8 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய தென்னாபிரிக்காவின் ககிஸோ றபாடா, ஏழாமிடத்திலிருந்து நான்கு இடங்கள் முன்னேறி மூன்றாமிடத்தை அடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,

பற் கமின்ஸ், 2. ஜேம்ஸ் அன்டர்சன், 3. ககிஸோ றபாடா, 4. ஜஸ்பிரிட் பும்ரா, 5. இரவிச்சந்திரன் அஷ்வின், 6. ஒலி றொபின்ஸன், 7. ஷகீன் ஷா அஃப்ரிடி, 8. கைல் ஜேமிஸன், 9. மிற்செல் ஸ்டார்க், 10. நீல் வக்னர்.

இதேவேளை, இந்தியாவுக்கெதிரான முதலாவது டெஸ்டில் 87 ஓட்டங்களைப் பெற்ற பங்களாதேஷின் ஷகிப் அல் ஹஸன், சகலதுறைவீரர்களுக்கான தரவரிசையில், நான்காமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி மூன்றாமிடத்தை அடைந்துள்ளார்.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

இரவீந்திர ஜடேஜா, 2. இரவிச்சந்திரன் அஷ்வின், 3. ஷகிப் அல் ஹஸன், 4. பென் ஸ்டோக்ஸ், 5. மிற்செல் ஸ்டார்க்.

இன்று ஆரம்பமாகிறது இரண்டாவது டெஸ்ட்:

## இந்தியாவை வீழ்த்துமா பங்களாதேஷ்?



பங்களாதேஷ், இந்திய அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியானது, மிர்பூரில் இன்று காலை 9 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில் இந்தியா வென்ற நிலையில், இப்போட்டியில் வெல்வதற்கு பல வழிகளில் பங்களாதேஷ் முன்னேற்றத்தைக் காண்பிக்க வேண்டியுள்ளது.

பங்களாதேஷ் அணியில் காயமடைந்த எபொடொட் ஹொஸைனுக்குப் பதிலாக தஸ்கின் அஹ்மட் களமிறங்குவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

மிர்பூர் ஆடுகளமானது சுழற்பந்துவீச்சுக்கு அதிக ஒத்துழைப்பு வழங்கும் என எதிர்பார்க்கப்படுகின்ற நிலையில், இரண்டு அணிகளின் துடுப்பாட்டப் பெறுபேறுகளிலேயே போட்டியின் முடிவு தங்கியுள்ளது.

இந்நிலையில், சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெறுவதை உறுதிப்படுத்துவதற்கு இப்போட்டியையும் இந்தியா வென்றாக வேண்டிய கட்டாயத்திலுள்ளது.

பதிலணித்தலைவர் லோகேஷ் ராகுலின் தலையில் பந்து பட்ட நிலையில், அவருக்குப் பதிலாக அபிமன்யு ஈஸ்வரன் அறிமுகத்தை மேற்கொள்வார் என எதிர்பார்க்கப்படுவதுடன், செட்டேஸ்வர் புஜாரா அணிக்குத் தலைமை தாங்குவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

## இன்டர் மிலனுக்குச் செல்லும் யன் சோமர்?



ஜேர்மனிய புண்டெலிஸ்கா கால்பந்தாட்டக் கழகமான பொரூசியா மொச்சென்கிளெட்பாவின் கோல் காப்பாளரான யன் சோமர், இத்தாலிய சீரி ஏ கழகமான இன்டர் மிலனின் குறும் பட்டியலில் உள்ளதாகக் கூறப்படுகிறது.

34 வயதான சோமருடனான மொச்சென்கிளென்ட்பாவின் ஒப்பந்தமானது அடுத்த மாதத்துடன் இறுதி ஆறு மாதங்களுக்குள் நுழைகிறது.

அண்மையில், இன்னொரு புண்டெலிஸ்கா கழகமான பயேர்ண் மியூனிச்சுக்கு சோமர் செல்வார் எனவும் கூறப்பட்டிருந்தது.

நடப்புப் பருவகாலத்தைத் தாண்டி தமது கோல் காப்பாளர் சமிர் ஹன்டனோவிச் தொடர்வாரா என மிலன் சந்தேகத்துடன் காணப்படுகின்றது.




மர்ஹூம் ஆர்.எம். றினோஸ் ஞாபகார்த்த தொடர் ஆரம்பம்:

## சாய்ந்தமருது மியான்டாட்டை வென்ற மாவடி பேர்ள்ஸ்

எம்.என்.எம். அப்ராஸ்

சாய்ந்தமருது மியன்டாட் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில், அதன் முகாமைத்துவ சபை உறுப்பினராக இருந்து மரணித்த மர்ஹூம் ஆர்.எம். றினோஸின் ஞாபகார்த்தமாக நடாத்தப்பட்டு வரும் மர்ஹூம் ஆர்.எம் .றினோஸ் ஞாபகார்த்த இருபதுக்கு-20 கடினபந்து கிரிக்கெட் தொடரானது சாய்ந்தமருது வொலிவேரியன் பொது விளையாட்டு மைதானத்தில் அண்மையில் ஆரம்பமானது.

ஆரம்பப் போட்டியில் மியன்டாட்டை மாவடிப்பள்ளி மாவடி பேர்ள்ஸ் அணி 5 விக்கெட்டுகளால் வென்றது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 22 டிசெம்பர் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.